உ

தேவ திருவருள் துணை

# ஆலய வழிபாடும் தத்துவமும்



சிவஸ்ரீ தியாக

சோமாஸ்கந்தராஜாக் குருக்களின்

குருப்பட்டாபிஷேக

10-வது ஆண்டு

நிறைவு விழாச்

# சிறப்பு மலர்

நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம்

1993

கல்வியே கருந்தனம்

# ஆலய வழிபாடும் தத்துவமும்

அன்னபூர்ணே ஸதாபூர்ணே சங்கரப்ராண வல்லபே!
ஞான வைராக்ய ஸித்யர்த்தம் பிக்ஷாம் தேஹி
ச பார்வதி!!

வேதாரணியம் குருக்கள் பரம்பரை
6 வது தலைமுறையைச் சேர்ந்த

சிவஸ்ரீ. க. தியாகராஜாக் குருக்கள்

**அவர்களின் மகன்**

சிவஸ்ரீ.
சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
(B. A. Cey)
(நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுரு)

அவர்களால் ஆக்கப்பட்டது

**நெல்லண்டையான் வெளியீடு**
இல: 6
1993

Ryohendra
10/04/95

# ஆலய வழிபாடும் தத்துவமும்


*ஆசிரியர்*

சிவஸ்ரீ.

தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
B. A, (Cey)


## ஆச்சாரிய குருப்பட்டாபிஷேக
## 10-ம் ஆண்டு நிறைவின்
## சிறப்பு மலர்

4-9-1993

நூலின் பெயர் : ஆலய வழிபாடும் தத்துவமும்

ஆசிரியர் : சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக் குருககள் B. A. (Cey)

முகவரி : நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதமகுருவும், அர்ச்சகரும், தும்பளை, பருத்தித்துறை.

மொழி : தமிழ்

பதிப்பு : முதலாம் பதிப்பு

ஆண்டு : ஆவணி 1993

உரிமை : நூலாசிரியர்

நினைவிற்குரியவர் : க. தியாகராஜாக் குருக்களும் அவர் தம்பத்தினி இராஜலட்சுமியம்மாவும்

வெளியீடு : நெல்லண்டையான் வெளியீடு

வெளியீட்டு இல : 06

அச்சகம் : குமார் அச்சகம் பருத்தித்துறை

சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு, பிரதிஷ்டாலங்கார
சித்தாந்த ஸாகரம்,
சமாதான நீதவான் அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர்
சபைத்தலைவர்

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு
சோ. தண்டபாணிகதேசிகர் அவர்கள் வழங்கிய

# மங்கல வாழ்த்துரை

சிவ சம்பந்தமுடையது சைவம் இது வழிபாடு வணக்கத் தெய்வம் ஆகிய இரண்டையும் சிறப்பிக்கிறது. இத்துடன் சமய தத்துவ உண்மைகளையும் தம்முள் அடக்கிக் காட்டுகின்றது. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைவதுதான் " ஆலய வழிபாடும் தத்துவமும் " என்ற நூலாகும் இந்நூலை முழுமையாகப் பார்வையிட்டேன். மிக ஆழமான கருத்துக்களை எளிமையான முறையிலே சகலரும் விளங்கிக்கொள்ளும் முறையில் ஆசிரியர் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B. A. அவர்கள் எழுதியிருக்கின்றார்.

இவர் சிறந்த சோதிடர் இக்கலையையும் அழகான முறையில் பயின்று அதன்மூலமும் மக்களுக்குச் சேவை ஆற்றிவருகின்றார். தந்தையார் மரபுமுறை வைத்தியம், போன்றவற்றையும் மக்கள் துன்பம் நீங்க ஆற்றி வருகின்றார். என்பதை யாவரும் அறிவர் இவர் குருப் பட்டாபிஷேகம் பெற்று 10 வருட நிறைவையும் பெற்றுள்ளார். இந் நிகழ்வை நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம் பெருமையுடன் கொண்டாடுவது வரவேற்கத்தக்கதே.

இவர் சிறந்த " சிவம் " என்ற நிறைந்த மங்கலத்தைப் பெற வேண்டும். குறைவற்ற நிதியங்களையும் பெறவேண்டும் என்று நாம் வணங்குகின்ற அருள்மிகு வல்லை முத்துமாரியம்மனை வேண்டுகின்றேன்

ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானம்
வல்வெட்டித்துறை
26-08-93

இங்ஙனம்
மங்கள வாழ்த்துக்கூறும்
சிவஸ்ரீ. சோ. தண்டபாணிகதேசிகர் J. P

கிரியாவித்தகர், குருமணி, விநாயக பூஜாதுரந்தரர், சிவாகம கிரியாரத்தினம் இந்துமதகுரு, சமயப்பிரசாரகர், புராணிகர்,

**சிவஸ்ரீ. கந்த சிவபாதசுந்தரக் குருக்கள் அவர்கள் வழங்கிய**

# அருள் ஆசியுரை

'' மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் ''

பரம்பொருளின் திருவருட் திறனை முன்னிட்டு!

சிவஸ்ரீ தி, சோமாஸ்கந்தராஜக் குருக்கள் B. A. அவர்கள் ஆசாரியாபிஷேக குருப்பட்ட பத்தாவது ஆண்டு நிறைவை நெல்லண்டையான வெளியீட்டுக்கழகம் சிறப்பாக நடத்துகின்றது. அத்தருணத்தில் ''ஆலய வழிபாடும் தத்துவமும்'' என்னும் நூலை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியுறுகின்றேன் இவ் ஆசிரியர் என்னிடம் ஆசாரியாபிஷேகம் குருப்பட்டம் பெற்றவர். இவர் எனது மதிப்பிற்கும், அன்பிற்கும் பாத்திரமாகிய சிஷ்யனாவர் இவரின் அறிவும் ஆற்றலும் போற்றத்தக்கது இக்கால மக்கள் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்களடங்கிய இந்த நூலை ஆக்கி வெளியிடுவதையிட்டு மிகவும் சந்தோஷம் அடைகின்றேன். இந்த நூல் மக்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக அமைந்திருக்கின்றது இந்த நூலை ஆக்கிய ஆசிரியர் நீண்ட ஆயுளும் நிறைந்த அறிவும் ஆற்றலும் பெற்று இறையருளும் குருவருளும் பெற்று வாழ வேண்டுமென்றும் இறைவனை வணங்கி எனது உளம் நிறைந்த ஆசியைத்தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டார்
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே.

சிவஞானபோதம் ( சூத் 12)

**க, சிவபாதசுந்தரக் குருக்கள்**
மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பளை.

திருக்கணித பஞ்சாங்க கணிதர் ''வேதாகம சோதிட பூஷணம்
அவர்களின் மைத்துணன் ''ஆரிய திராவிட பூஷணம்''
''சமஸ்கிருத பண்டிதர்'' ( ஆசிரியர் யாழ். )

சிவானந்த குருகுலம் பிரம்ம ஸ்ரீ கி. சதாசிவசர்மா
வழங்கிய

# ஆசியுரை

இந்துமக்களின் இறைவழிபாட்டின் தன்மைகள், அவசியம்,, ஆலய வழிபாட்டு முறைகள் இவற்றைக் கர்ணபரம்பரையாக அல்லது பாரம்பர்ய வழித்தோன்றல்களின் கூற்றுக்களை யொட்டியே மக்கள் கடைப்பிடித்து வருகிறனர். முக்கியமாக இறைவனை மனம், வாக்கு காயம் என்பவற்றால் வழிபாடாற்றுவதற்கு, ஆன்மா இறைவனிடம் லயிப்பதற்கு ஓர் இடம் தேவை. அதுவே ஆலயம் எனலாம், விக்கிரக வழிபாட்டைத் தவிர ஆலய அமைப்புக்கள், அவ்வமைப்புக்களுக்குரிய காரணங்கள், இவற்றை ஏதோ தெரிந்தவரையில் பாரம்பரியமாக அறிந்து கொள்கின்றோம். இவற்றை இலகுவாக அறிந்துகொள்ளும் பொருட்டு உருவாக்கப் பெற்றுள்ளது இவ்வரிய நூலாகும்.

வேதங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து நூல்வடிவமாக யாத்து வேதங்கள் பற்றிய தெளிவான அறிவை இளம் தலைமுறையினரிடையே இலகுவாக புகுத்தியவராகிய இவ் ஆசிரியர் வேதங்களைப் பயன்படுத்தும் இடமாகிய ஆலயத்தைப்பற்றி ஆய்வு செய்து அதை நூல்வடிவமாக்கியவை மிகச்சிறந்தோர் முயற்சியாகும். இறைவணக்கம், வணக்க முறைகள் அமைப்பின் வடிவங்கள், இவற்றை இலகு தமிழில், எளிதில் விளங்கும் வண்ணம் அமைத்திருப்பது சிறப்புடையதாகும்.

அவரின் முயற்சி மென்மேலும் ஓங்கிவளரும் வண்ணம் பரம்பொருளைப் பிரார்த்திப்பதுடன் எனது அன்புகலந்த ஆசிகளையும் நல்குகின்றேன்.

லோகாஸ் ஸமஸ்தா
சுகினோ பவந்து!!
சுபம்!

ஆசிரியர் - யாழ். சிவானந்தகுருகுலம்
''கீதாலயம்''
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
25-08-93

இங்ஙனம்
கி. சதாசிவசர்மா

வடமராட்சி இந்துக் குருமார் ஒன்றியத் தலைவரும்,
பருத்தித்துறை சிவன் கோவில் பிரதமகுருவும்,
இந்து சமய குருவுமாகிய

பிரம்மஸ்ரீ. தா. வாசுதேவக் குருக்கள்

வழங்கிய

# ஆசியுரை

'' ஆசார்யாய ப்ரீயம் தனம் ஆவஹ்ருத்திய ''

என்று தைத்திரீய உப நிஷத் தறைகின்றது. வித்தையைத் தருகின்ற குருவிற்கு அவர் இஷ்டப்படும் தானத்தைக் கொடுக்க வேண்டும் இதன் படி நல்ல ஆசானிடம் தானமாவும், வினை தவமாகவும் பெற்ற தம் அறிவை மற்றவர்களிற்குத் தம்பி சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தாராஜாக் குருக்கள் B. A. அவர்களிற்கு, 10-வது குருப்பட்ட பூர்த்தி விழாவை நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் ஏற்பாடு செய்து கொண்டாடு கின்றது. சிவஸ்ரீ. சோமாஸ்கந்தாராஜக் குருக்கள் அவர்கள் வேதங்கள் என்ற நூலை தொகுத்துள்ளதனை யாவரும் அறிவர். அதன் பின்பு '' ஆலய வழிபாடும் தத்துவமும் '' என்ற நூலை 04-09-93 அன்று வெளியிடும் இந்த நலமான நந்நாளிலே மேலும் வேத சாஸ்த்திர கிரியா உபதேச மார்க்கத்திலும் அறிவு மேம்பட வேண்டும் என்று நாம் தினமும் பூசிக்கின்ற பார்வதி பரமேஸ்வரன் அருள் வேண்டி வணங்குகின்றோம். சகல நலன்களும், குறைவற்ற செல்வங்களும் பெற்று உய்வடைய வேண்டும் என்றும் வடமராட்சி இந்துக் குருமார் ஒன்றியத்தின் சார்பிலும் மனமார வாழ்துகின்றேன் இந்நூல் சகல சைவ மக்களிற்கும், மாணவர்களிற்கும் தேவையான அருமருந்தன்ன விடயங்களைச் சுமந்து வருகின்றது. இதனை யாவர் வேண்டி ஆலய வழிபாட்டின் தத்துவத்தை யுணர்ந்து உய்வடைவீர்களென ஆசி கூறுகின்றோம்

சுபமஸ்த்து

சிவன் தேவஸ்தானம்
பருத்தித்துறை.

பிரம்மஸ்ரீ. தா. வாசுதேவக்குருக்கள்
பருத்தித்துறை.
22-08-93

மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர்
தேவஸ்தானம், ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமி திருக்கோவில்,
அறங்காவலரும், முகாமையாளரும், பிரதமகுருவும்,
யாழ்ப்பாணம் வண்ணை கிழக்கு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் கோவில்
தர்மகர்த்தா உரித்தாளனும்,
ஸ்ரீமாவை விநாயகராதீன ஹமத் சிவாகம சிற்பசாஸ்திர சோதிட
நிறுவனத்தின் அமைப்பாளரும்,
அகிலஇலங்கை சைவகுருமார் அர்ச்சகர் பேரவையின் உபதலைவருமான

*ஸ்ரீலஸ்ரீ சு சிவஷண்முகானந்தக் குருக்கள் வழங்கிய*

# ஆசியுரை

*மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்க சிவஸ்ரீ க. தியாகராஜாக்குருக்கள் அவர்களும், அவர் தம் தர்மபத்தினியாரும் செய்து கொண்ட அருந்தவப்பேற்றால் அவதரித்த அருந்தவப் புதல்வன் சிவஸ்ரீ. தி, சோமாஸ்கந்தராஜக் குருக்கள் (B. A.) [பிரதமகுரு கசவெட்டி பத்திரகாளி கோவில், நெல்லண்டைபத்திரகாளி கோவில்] அவர்கள் 10 வது குருப்பட்டாபிடேக விழாவினன்று "ஆலய வழிபாடும் தத்துவங்களும்" என்னும் நூல் வெளியிடுவதையிட்டு பெருமையடைவதோடு மகிழ்ச்சி அடைகின்றேன்.*

*குருக்கள் அவர்களின் ஆக்கக்கங்கள்' பிரசங்கங்கள் அவரது அறிவுத் திறமையைக் காட்டுகின்றன. பட்டதாரி என்றோ குருக்கள் என்றோ கபருமைப்படாது இன்னும் கற்க வேண்டுமென்று கற்றவர்களுடன் கலந்துரையாடுதல், கருத்துப்பரிமாறுதல் அவரது எதிர்காலப் பசுமைக்கு நீர் பாய்ச்சுவது போல் ஆகிறது.*

*அவர் இன்னும் பல அரிய நூல்களை இயற்றி சிறந்த குருவாகவும், பேராசிரியராகவும் திகழ வேண்டும்: என எல்லாம்வல்ல இறைவனை அபரிமிதமாக இறைஞ்சுகிறேன.*

நல்லூர்
24-08-93

சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்

ஸ்ரீநந்தி காளை மகாரிஷி வழித்தோன்றலாகிய சித்தாந்த சைவப் புலவரும் பண்டிதரும் முடிக்கொற்றாவத்தைச் சித்திவிநாயகர் ஆலய குருவும் ஆகிய

சிவஸ்ரீ ம. ச வேதாரணியக் குருக்கள் அவர்கள் வழங்கிய

## வாழ்த்துப்பாக்கள்

சீராரும் தியாகராசக்குருக்கள் செய்திடு தவத்தால் வந்தோன்
பேராரும் பத்திரகாளி அம்மை பெட்புறு பூசகரானோன்
பாராரும் புகழ் கலைத்துறை கற்றுக் கலைமானிப்பட்டம் பெற்றோன்
பேராரும் சோமாஸ்கந்த ராசா யெனும் பெயர் கொண்டுற்றோன்

அரியதொரு ஆலயவழிபாடும் தத்துவமு மெனவாக்கி
தெரிய வளித்தான் தெளிந்த அறிவாளன் ஆகுவன்
உரிய வேதங்கள் எனவொரு நூல் உவந்தளித்தோன்
பெரிய புகழ்கொண்டு பெட்புடன் வாழ்க மன்னே

அருமறைகள் ஆகமங்கள் ஆய்தறியும் செம்மல
திருமுறைகள் இதிகாசங்கள் புராணங்கள் தெரிந்தோன்
பெருமை கொள் ஆசான் புகழ் ஓங்கு குருவானேன்
பருமையுறு பாருலகில் வாழ்ந் திடுக பல்லாண்டு

எனக்கு மகன்மையெனும் எழிலோன் மேலாம்
மனவிரு ளகற்றி மாணவர்க்கு கலையூட்டும் மாண்போன்
தினமும் பத்திரைத் தேவிபதம் அர்ச்சிப் போன்
தனமுடனே கல்வியெலாம் தழைத்திட வாழ்க! வாழ்க!!

புலோலி மேற்கு,
சாளம்பை,
பருத்தித்துறை

ம. ச. வேதாரண்யக் குருக்கள்

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார்தேவஸ்தான அறங்காவருலம்,
பிரதமகுருவுமாகிய

## சிவஸ்ரீ. ச மகாலிங்கசிவக் குருக்கள் வழங்கியது

அரசடி விநாயகர் திருவருட்திறனை முன்னிட்டு

சிவஸ்ரீ. தி சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B. A. அவர்களின் ஆச்சாரியாபிஷேக குருப்பட்ட பத்தாவது ஆண்டு நிறைவையும், அவரது நூலான ''ஆலய வழிபாடும் தத்துவமும்'' என்னும் நூலையும் வெளியிடுவதையிட்டு யாம் மட்டற்ற மகிழ்சியடைகிறோம்.

ஆகமங்களிலே, சிறப்பாகக் கூறப்படும் ஆலயவழிபாடுகள் யாவும் கிறந்த தத்துவ அடிப்படைகளை மையமாகக் கொண்டே, நிகழ்த்தப் படுகின்றது. அந்த உண்மைகளையெல்லாம் சமயதத்துவ அறிவும். ஆலயக் கிரியா பாகங்களில் அனுபவமும் நிரம்பப் பெற்ற குருக்கள் அவர்கள் எழுதிய ''ஆலய வழிபாடும் தத்துவமும்'' என்னும் நூல் பாடசாலை மாணவர்கள், சைவ அடியார்கள் சகலருக்கும் பயனுடையதாக அமைவதுடன் மட்டுமன்றி ஆலயக் கிரிகைகளைச் செய்யும் சிவாச்சாரியசிகளுக்கும் இது ஒரு கைநூலாக விளங்குகிறது.

சிவாச்சாரியர் அவர்களின் சிவாச்சாரியப்பணி பத்து ஆண்டைப் போல் பல்லாண்டு வாழவேண்டும். அவருக்கு நீண்ட ஆயுளையும் நூல்களை எழுதும் நிறைந்த அறிவாற்றலையும் ஆண்டவன் அவருக்கு வழங்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதுடன் குருக்கள் அவர்களுக்கு எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

''தெளிவு குருவருள் பெறுவதுதானே''
''லோகாஸ் ஸமஸ்தா:
சுசிலோ பவந்து!

நாயன்மார்கட்டு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
26-08-93

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார்
தேவஸ்தான அறங்காவலரும்,
பிரதம குருவும்,
சிவஸ்ரீ. ச. மகாலிங்கசிவக் குருக்கள்

அருள்மிகு நீர்வேலி கந்தசுவாமித் தேவஸ்தான அறங்காவலரும், சிவானந்த குருகுல சபைத் தலைவரும், சிவாச்சாரிய திலகமும் ஆகிய

**சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் அவர்கள் வழங்கிய**

# ஆசியுரை

*" உருவாய் அருவாய் உளதாய் இலதாய்*
*மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்*
*கருவாய் உயிராய் கதியாய் விதியாய்*
*குருவாய் வருவாய் அருள்வாய் குகனே "*

அருள்மிகு நெல்லண்டை அம்பாள் ஆலயப் பிரதம சிவாச்சாரியார் சிவசிறீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களின் பத்தாண்டுக் குருத்துவப் பணியின் நிறைவை வாழ்த்தி, மேலும் வளம் பெறச் செய்யும் நோக்குடன் நெல்லண்டையான் வெளியீட்டுக் சழகத்தினர் பிரசுரிக்க அருள்பாலித்துள்ள பாராட்டு மலருக்கு எமது ஆசியுரை ஒன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இளமை, ஆர்வம். வேகம், விவேகம், உள்ளப்பக்குவம், கல்வி கேள்விஞானம் ஒருங்கே அமைய இறைபணியுடன் தன் ஆசிரிய பொதுப் பணிகளையும், அன்பர் அம்பாள் அடியர் சிந்தை குளிரச் சிறப்புடன் ஆற்றி வளரும் சைவக்குருமார் வரிசைக்கு இலக்கணமாய் இலட்சியமாய் வாழ்ந்து காட்டும் சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்களின் பக்தி கலந்த முப்போதுய் திருமேனி தீண்டும் பணி புனிதமும் புதுமையும் தோய்ந்து சிறப்புறச் சர்வலோக நாயகியின் கடைக்கண் அருள்பாலிக்க வேண்டும் எனத் திரிகரண சுத்தியுடன் பிரார்த்தித்து இவ் ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் பணியும் ஆயிரம் பிறைகாணக் கலியுகவரதன் ஸ்கந்தப்பெருமான் அருள்பொழிய வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

**சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள்**
பிரதம சிவாச்சாரியார்
அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமித்
தேவஸ்தானம்

நீர்வேலி
26-08-93

# நெல்லண்டை சனசமூக நிலையத்தின்

தலைவர் வழங்கிய

# வாழ்த்துரை

சிவத் தொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவத் தொண்டு சய்வார்க்குத் தீயவர்கள் சாரமில்லை
சிவத் தொண்டு செய்வார்க் கிரவும் பகலுமில்லை
சிவத் தொண்டு செய்வார்க்குப் பழி யூனுணவு மில்லை

"ஆலய வழிபாடும் தத்துவமும்" என்ற நூலை எழுதியும் குருப் பட்டாபிஷேகம் பெற்று 10-ம் வருடத்தினை பூர்த்தி செய்தும் குருநலத்துடன் விளங்கும் குருக்கள் ஐயா சிவஸ்ரீ தி சோமாஸ்கந்தராஜா B A அவர்கள் நீண்டஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் நல்ல தேக நலத்தையும் பெற்று மேலும் இறைசேவை, சமயஸேவை, கல்விச் சேவை செய்து பல்லாண்டு காலம் வாழ நெல்லண்டை அம்மன் திருவருளை நமது சனசமூக நிலைய சார்பில் வேண்டுகிறேன்.

இறை சேவை வளர்க!

நா. விஜயரத்தினம்
தலைவர்.

28-08-93

## தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்

### பரிபாலன சபைத் தலைவர் வழங்கிய

# மகிழ்ச்சியுரை

ஆச்சார்ய பட்டாபிஷேகம் பெற்று பத்தாம் அகவை நிறைவு விழாக் கொண்டாடும் சிவஸ்ரீ தி சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் மேலும் பல அகவைகாண வேண்டும் என எமது சபை வாழ்த்துகின்றது. வளரும் இளம் சமுதாயத்திற்குச் சமயம் மூலம் வாழ்க்கைநெறி புகட்டிட இச்சிறப்பு மலர் உரிய பங்களிப்பை நல்குவதையிட்டு மகிழ்ச்சி கொள்ளுகின்றோம்.

வளர்க சமயப்பணி

மகிழ்ச்சியுடன் வாழ்த்தும்
**சபா ரவீந்திரன்**
சட்டத்தரணி

23-80-93

துன்னாலை கிழக்கு சனசமூக நிலையத்தின் தலைவரும்,
நெல்லண்டை அம்மன் கோவில் செயலாளரும் ஆகிய

திரு. பா. சுப்பிரமணியம் சட்டத்தரணி அவர்கள் வழங்கிய

# பாராட்டு

சுவாசிக்காமல் உயிர்வாழ முடியாதது போல, உள்ளத்திலே ஒரு உருவத் தோற்றமின்றி நாம் எதனையும் நினைத்துப் பார்க்க முடியாது. இணைப்பு விதியின் படி வெளி உருவம் உள் உருவத்தை யும், உள் உருவம் வெளி உருவத்தையும் தோற்றுவிக்கின்றது. அத னால்தான் இந்துக்கள் வழிபடும் பொழுது புறச் சின்னங்களைப் பயன்படுத்துகின்றனர். இப் புறச்சின்னங்களான விக்கிரகங்கள் ஆலயங் களில் புனிதமான முறையில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. அலை பாயும் எமது மனதை ஒரு முகப்படுத்தும் அற்புத பணியை ஆலயங் களே ஆற்றுகின்றன. இறைவனில் மனதைப் பதித்து ஞானநிலையை அடையும் பொழுதுதான் அவனது நிச்சலமான நிலை நமக்கும்வரும் மனிதனாகப் பிறந்த எல்லோரும் இறைவனை நம்பியாக வேண்டும் இந்த நம்பிக்கை வளரச் சிறந்த இடம் ஆலயமாகும். நாம் நினைக் கின்ற கருமங்களுக்கெல்லாம் உயிர் நாடிபோல் இயங்குவது ஆலய வழிபாடுதான். அந்த வழிபாட்டு நெறியைக் கடைப்பிடிக்க உதவியாக இருக்கின்ற '' ஆலய வழிபாடும் தத்துவமும் '' என்ற நூல் மக்கள் சமூகங்களுக்குப் பயன்படும் என நினைக்கின்றோம். இந்நூல் சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் எழுதியுள்ளார். அதனை நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம் பெருமையுடன் வெளியிடுகின்ற இச் சுப நாளில் இந்நூல் ஆசிரியரின் குருப்பட்ட 10ம் ஆண்டு விழாவையும் இக் கழகம் கொண்டாடுகின்றது.

சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து சமய வாழ்க்கை வாழும் சமூகங்களுக்கு நல்ல குருவாக இருந்து தொடர்ந்தும் சேவை புரிய வேண்டுமென எமது சனசமூக நிலையத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன்.

துன்னாலை கிழக்கு ச. ச. நிலையம்
பருத்தித்துறை.
26-08-93

பா. சுப்பிரமணியம்
(சட்டத்தரணி)
தலைவர்

நயினை நாகபூஷணி அம்மன் பிரதம சிவாச்சாரியாரும்,
இந்துக்குருமார் ஒன்றியத் தலைவரும் ஆகிய
ஆகமப்பிரவீணா

# சிவஸ்ரீ ஐ. கைலை. வாமதேவக் குருக்களின்

## ஆசிச்செய்தி

ஆலயமும் அதன் தத்துவமும் ஆன்மாக்களை உய்விப்பதற்காக இறைவன் இருக்கின்ற திருத்தோற்றம். இந்தத் தத்துவத்தை நாம் அறியக்கூடிய வகையில் நமக்குரிய முறையில் நூலாக வெளிவருகின்ற ஆலய வழிபாடும் தத்துவமும் என்ற இந்த நூலினால் சைவமும் தமிழும் மேன்மேலும் தழைத்து வளரவேண்டும். இவ் ஆசிரியர் சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்களின் சேவை வளரவேண்டும் என்று எல்லாம் வல்ல கைலாயநாயகியாகிய அன்னை நாகபூஷணியை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம்.

மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெலாம்!

முத்தவிநாயகர் கோவில்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
26-08-93

சிவஸ்ரீ ஐ கைலை வாமதேவக் குருக்கள்
(இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர்)
நயினை

நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகம்
தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் குருப்பட்டம் தரித்த
பத்தாண்டு நிறைவையொட்டி நடாத்திய பெரு விழாவில
தும்புருவளை சித்தி விநாயகர் தரும பரிபாலன சபையின் சார்பில்

**ஆசிரியர் சீ. சிவப்பிரகாசம் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

நலங்கினரும் நற்சோமாஸ் கந்த ராஜா
நாடோறும் அறிவளிக்குப் ஆசான் ஆனீர்
இலங்கு சைவ மரபோங்கி என்றும் வாழ
ஏற்றமுற குருக்களாய் ஆண்டு பத்தும்
உளங் கிளரும் பிரசங்க மாரி பெய்தும்
ஊக்கமுடன் பூசையினை ஒழுங்கிற் செய்தும்
பலர் புகழும் சிவாக மோப தேச வாசஸ்
பதிப் பட்டம் பெற்றுவிட்டீர் வாழி வாழி.

கல்வியொடு செல்வமுயர் ஒழுக்கம் நீதி
கனிந்தமொழி நன்றிமற வாமை ஆய
பல்குணமும் நிறைந்த சோமாஸ் கந்த ராஜப்
பண்புடையீர் குருக்களாகிக் திருமணங்கள்
நல்லபிடே கங்களெல்லாம் ஆற்றலாலே
நாட்டினிலே உயர்ந்த குருப்பட்டம் தாங்கி
எல்லவரும், ஏந்திடவே வாழு கின்றீர்
எத்திக்கும் பரவட்டும் உமது சேவை.

திருமறைகள் புராணங்கள் இதிகா சங்கள்
தியானத்தில் தினம்நினைந்து அம்மை பாதம்
தரும் அருட்டே னுண்டு மனம் வாக்குக் காயம்
தவநெறியின் வழிச் செலுத்தி மாணவர்க்குக்
குருவாகிக் கலை பயிற்சி அறிஞர் போற்றும்
குல மணியாய்த் திகழ் சோமாஸ் கந்த ராஜ
அருள்மணியே நெல்லண்டை ஆலயத்தில்
அர்ச்சகரே நீடூழி வாழி வாழி.

தும்பளைவீதி,
பருத்தித்துறை

சீ. சிவப்பிரகாசம்
28-07-93

இலக்கண வித்தகர் பொற்கிளிக்கொண்டல், தலைமையாசிரியர்
பண்டிதர் வித்துவான்

க. கிருஷ்ணபிள்ளை அவர்கள் வழங்கியது

# ஓர் வாழ்த்துரை

தும்பளை நெல்லண்டைத் திருப்பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் சிவலயத்தில் பலஆண்டுகளாய் அர்ச்சகராய்ப் பணியாற்றி வரும் ஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்கள் குருப்பட்டம் பெற்றருளிய சுபமுகூர்த்தத்தில் பத்தாவது ஆண்டுப் பூர்த்தியான இன்று, அவரது சிறப்பியல்புகளிற் சிலவற்றையாவது நினைவு கூர்ந்து அவரை வாழ்த்துதலும் எமது கடமைகளுட் சிறந்த ஒன்றாகும்.

இக் குருக்கள் தமது தந்தையார் இப்பகுதியில் செய்துவந்த இந்த அர்ச்சகர்த் தொழிலையே, தாமும் தொடர்ந்து கைவிடாது ஆற்றி வருகின்றார். இக்குருக்கள் பிற பூசகர்களிலும் பார்க்க இவ்வாயத்தே மிகுந்த பக்தியுடனும், கடமையுணர்ச்சியுடனும் அன்பர்களும், அடியார்களும் கண்டு மெச்சிப் போற்றப் பூசையாற்றி வருதல் யாவரும் நன்கறிந்த ஒன்றேயாம்.

குருக்கள் அவர்கள், புராண படனங்களிலும் அவற்றுள் விசேடமாகக் கந்த புராண படனத்தில், பதவுரை, பொழிப்புரை கூறுவதில் மாத்திரமேயன்றி, விருத்தியுரைகூறி, கேட்போரை மகிழ்விப்பதிலும் சிறந்த ஆற்றல் படைத்தவராதலை நேரில் அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள். இன்னும் அன்பர்கள் விரும்பிக் கேட்கும்போது தருணம் வாய்க்கும்போது சிவதலங்களிற் சென்று சைவசமயச் சிறப்பைச் செந்தமிழில் ஆற்றிவரும் தொண்டையும் புரிந்து வருகின்றார்கள்.

இன்னும் இவ்வாலயத்தில் மனேச்சருள்ளிட்ட நிர்வாகஸ்தர்களோடும், அங்கத்தவர்களோடும், ஊரவர்களோடும் மிக்க ஒற்றுமையாய் அவர்கள் விருப்பிற்கெல்லாம் இணங்கி மிக்க டணிவோடும் கடமையாற்றி வருகின்றார்கள். மேலும் இவர் கல்வியிற் கலைநெறியில் B. A. பட்டம் பெற்ற ஒரு பட்டதாரியாய் இருந்தும் ஆசிரியத் தொழிலிற்

சென்று அமரத்தக்க பல தகைமைகளும், வாய்ப்புக்களும் இருந்தும் அத்தொழிலை நாடாது சிவசக்தியாய் சிவத்துடன் அதுவிதமாய் விளங்கும் அம்மையாராகிய மாணிக்க வல்லியின அம்சமான ஸ்ரீபத்ர காளி அம்மையின் பதவியையும் திருப்பாதங்களையும் மறவாது கை விடாது அவரடியே சரணமாய் நிலைத்து நிற்றல் அம்மையாரதும் இவ்வாலய பரிபாலத்தாரதும் பெரு விருப்பமே போலும்.

இத்தகைமைகள் எல்லாம் பெற்று விளங்கும் குருக்கள் ஐயா அவர்கள் இன்னும் மேலதிகமாக இவ்வாலயத்தே நிலைத்து நின்று சிறந்த தொண்டுகளை ஆற்றி அரோக திடகாத்திரராய் சகல செவ்வங் களாலும் பொலிந்து பல்லாண்டுகள் வாழ மனங் கொள்ளும் பெரியோர்களுடன் சிறியேனும் ஒன்றி நின்று எல்லாம் வல்ல இறையருட் சக்தியால் வேண்டி அவர்களை வாழ்த்துதல் புரிகின்றேன்,

துமபளை,
பருத்தித்துறை.

க. கிருஷ்ணபிள்ளை
பண்டிதர் வித்துவான்

மருதந்தெணி தேவஸ்தான பரிபாலன சபையின் போஷகரும்,
இளைப்பாறிய அதிபரும், பண்டிதருமாகிய

மூத்ததம்பி பொன்னையா அவர்கள சொல்லியது

# மகிழ்வுரை

''இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது நாம்கடவுளை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' என்பது நாவலர் பெருமானின் திருவாக்கு. மன்னா உலகத்து மன்னுகல் குறித்து புகழ்நிறுவி வாழ்ந்து வருபவர் ஒருசிலர் அத்தகைய ஒரு சிலருள் ஒருவர்தான் பாராட்டுக்குரிய சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B. A. நெல்லண்டைப் பத். அம். கோவில் பிரதமகுரு அவர்கள். தோன்றிற் புகழொடு தோன்றுக என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாக வாழும் அவர்களின் பணிகள் பராட்டுக்குரியன.

இறைவன் நமக்குத் திருவருள் பாலிக்கத் திருவுளங் கொள்ளும் போதெல்லாம் ''ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாழ்வாழ்க'' என்கிறது திருவாசகம் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிற்கும் பரம்பொருளை அருவம் உருவம் அருஉருவம் ஆகிய திருமேனிகள் மூலம் நம்மை வந்து நெருங்கவைத்தவை ஆகமங்கள்.

பசுவினுடைய உடம்பு முழுவதும் பாலின்தன்மை இருப்பினும் கொம்பு, வால் போன்ற ஏனைய உறுப்புகளிலிருந்து பாலைப் பெற முடியாது. முலையிலிருந்தே பாலைப்பெறமுடியும். அதுபோல எங்கும் நீக்கமற நிற்கும் பரம்பொருள் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்க உருவந் தாங்கி எழுந்தருளியிருக்கும் இடமே ஆலயம். ஆலயம் ஆன்மா சிவத்துடன் ஒன்றுபடும் இடம். ஆகம முறைப்படி அமைந்த ஆலயங்களின் மகிமை அளவிடற்கரியது.

'' ஆலயந்தானும் அரனெனத் தொழுமே '' சிவானபோதம்

ஆகமங்களிற் கூறப்படும் பிரதிட்டை, குடமுழுக்கு முதலிய நைமித்திய கிரியைகளையும், அபிடேக, அலங்கார, ஆராதனை ஆகிய நித்திய கிரியைகளையும் கற்றுணர்ந்த அறிவு ஒழுக்கக்கங்களில் சிறந்த சிவாச்சரியர்களால் செய்யப்படும்,

ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களில் இருந்து இறைவன் கண மேனும் விட்டகலாது சாந்நித்தியமாயிருப்பான் முற்கூறியவாறு அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவர். சிவவாழ்வுகளில் சிவஸ்ரீ தியாகராஜாக் குருக்கள் எனது மாணவன். அவருக்கு வித்தியாரம்பம் செய்தது நான் என்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். அப்படியானவரின் புத்திரன் வாழையடி வாழையாக நீண்ட பாரம்பரியமுடைய சிவாச்சரியார் மரபில் உதித்தவர் பூசைசெய்யும் ஆலயத்தில் அன்னையின் அருள் ஆட்சி நிலவும் என்பதற்கு ஐயமில்லை அவர் ஆலய வழிபாடு பற்றி எழுதுவது மிகவும் பொருத்தமானதே எனது மாணவனின் மகன் எழுதும் நூலுக்கு பாராட்டு வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவைகளை எல்லாம் கற்றுணர்ந்து B. A பட்டதாரி ஆசிரியராகவும் சிவாச்சாரியராய் இருந்து கிரியைகள் செய்பவராகவும், வேதங்கள், ஆலயவழிபாடும் தத்துவமுமெனும் நூல்களை வெளியிட்டும், சமயப்பணியும், சமூகப்பணியும் செய்பவராகவும் இருக்கக்கூடிய குருவைப்பெற்ற இப்பதியின் பெருமைதான் என்னே

இவர் இதுபோன்று இன்னும் பல நூல்கள் எழுத அருள்பாலிக்க வேண்டும் என அன்னையை வேண்டி என் உள்ளம் நிறைந்த பாராட்டுகளைத் தெரிவிக்கிறேன்.

28-08-93 மு. பொன்னையா

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவனும்,

கம்பன் கழக இளம் பேச்சாளனுமாகிய

## செல்வன் க. யோகநாதன் வழங்கியது

நெல்லண்டைப் பத்திரகாளியம்பாள் பிரதம குருவும், நெல்லண்டையான் வெளியீட்டுக்கழக அமைப்பாளர்களில் ஒருவருமான சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் ஐயா அவர்களிற்கு நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம் நடாத்தும், பட்டாபிஷேக 10-ம் ஆண்டு பூர்த்தி விழாவையிட்டு, பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஏற்ப, ஒருமனிதன் சமுதாயத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டான ஐயர் அவர்கள், மற்றவர்களால் போற்றப்படுகின்றார். இவர் சமூகத்திற்கு ஆற்றிய அரிய பல சேவைகள் எண்ணில் அடங்கா இவர் எனக்கு நல்ல குருவாக, கண்டிப்பான தந்தையாக, பாசமுள்ள நல் நண்பனாக, அன்பு அண்ணாவாக என்னை வழிநடாத்தி எனது பல்கலைக்கழக புகுமுகத்திற்கு பல உதவிகளைச் செய்துள்ளார்.

இதே போன்று இன்னும் எத்தனையோ பல இளைஞர்களும் யுவதிகளும், மாணவர்களும், பெரியோர்களும் ஐயாவின் அறிவு, உதவி பெற்று உயர்நிலை கண்டுள்ளதை, இந்த சமூகம் அறியும்.

''மக்கள் தொண்டே மகேசுரன் தொண்டு'' என்பதற்கமைய மக்களிற்கு தொண்டுசெய்து இறையருள் பெற்றவர். யாவரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பது தவிர வேறொன்றும் காணாத உள்ளம் கொண்டவர், எண்ணியதை எண்ணியவாறே தனது இடைவிடா முயற்சியாலும், கடின உழைப்பாலும், நம்பிக்கையாலும் எய்தி வாழ்வில் வெற்றிகண்டு, தனது அனுபவத்தை எமக்குப் பாடமாக்கி எமக்கு நல்வழி காட்டுபவர்.

'' உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது'' என்பதற்கமைய கள்ளமிலா நெஞ்சுகொண்ட அறிவுச்சுடர் திக்கெலாம் ஒளிபரப்பியுள்ளது. இவரின் ஆசிரிய சேவை வடமராட்சி மட்டுமன்றி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களி எல்லாம் பரவியுள்ளது.

தனது பணம் சொத்துகள் அறிவை உவந்தளித்தல் மட்டுமன்றி தனது ஓய்வு நேரங்களில் எல்லாம் மாணவருக்கு அறிவைப் புகட்டு வதிலேயே செலவிடுபவர். அவர் எம்முடன் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் ஏதோ ஒவ்வொரு விதத்தில் எமக்கு அறிவைத்தரும் என்பது மெய்ப்பொருள் காணும் பல மாணவர்களது கருத்தாகும்.

இப் பெருமகன் இந்தியாவின் அறிஞர்களாகிய திருநாவுக்கரசர் திரு. வி. க. விவேகானந்தர், டாக்டர் மு. வரதராஜன் ஆகியோரது நெறியிலே நின்று வாழ்பவர்.

எமது ஆசிரியராகிய குருக்கள் ஐயா அவர்கள் மேலும் மேலும் மாணவர்கட்கு அறிவூட்டி நல்லதோர், இளைய மாணவ சமுதாயத்தை உருவாக்க, எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*" ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப் புடைத்து"*

25-08-93 **ச. யோகநாதன்**

மு. வேலாயுதபிள்ளை
ஓய்வு பெற்ற ஆசிரியர்
பாலபண்டிதர் வழங்கிய

# பாராட்டுரை

நமது ஈழத்திருநாட்டிலே பிறநாட்டவரது ஆட்சியால் சைவத் துறை சீர்குன்றியிருந்த காலத்திலே ஏறுபோலத் தோன்றி வீறுநடை நடந்து அத்துறைக்குப் புத்துயிர் ஊட்டினார் நாவலர் பெருமான். அவருடைய வழியிலே அவருடைய மாணவரும் வேறுபலரும் தோன்று '' மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் '' என்ற கோட்டுபாட்டுறுதியுடையவராய்ப் பல்வேறு வழிகளிலும் தொண்டாற்றினார்கள் இப்பொழுதும் ஆற்றிய வண்ணமே உள்ளனர்.

நமது மதிப்பிற்குரிய பிரம்மஸ்ரீ . தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B, A. ஆலயபூசை, சமயப் பிரசங்கம் நூல்வெளியீடு என்று இன்னோரன்ன பலவழிகளிலும் சைவத்திற்குத் தொண்டாற்றி வருகிறார்கள் அவருடைய வெளியீடாகிய '' ஆலய வழிபாடும் தத்துவமும் '' என்னும் நூல் வெளியீட்டுப் பத்திரம் ஆண்டுநிறைவை ஒட்டி வெளி வருவதைக்கண்டு சைவஉலகு உவகையும் பெருமிதமும் கொள்ளும் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

அவர் பணிவு, கடமை என்னும் பண்புக்கு இலக்கணமாகவும் ஊக்கமுடைமைக்கு உதாரணமாகவும் விளங்குவர்.

'' தாமின்புறு வதுலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தோர் '' என்னும் குறளை வாழ்க்கையின் இலட்சியமாக உடையவர் அவர் பாடசாலை வாழ்விலே எமது மாணவராய் இருந்தார். என்பதில் நாமெல்லாம் பெருமை அடைகிறோம்.

இந்நூலுக்கு நல்ல வரவேற்பினைக் கொடுத்துச் சைவ உலகு பயனடையும் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. குருக்கள் அவர்களுக்கு எல்லாம் வல்ல பரம்பொருள் சேமசுகத்தையும் நீண்ட ஆயுளையும், செல்வத்தையும் கொடுத்து நன்னிலையில் நிறுத்தும் வண்ணம் இறைஞ்சுவோமாக.

'' ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு ''

மு. வேலாயுதபிள்ளை

தும்பளைவீதி,
பருத்தித்துறை.
22-08-93

## கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியன்)

அவர்கள் வழங்கிய

# புத்துரை வாழ்த்து

சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களின் 10-வது ஆண்டு ஆச்சார்யப்பட்டாபிஷேக நிறைவையொட்டி மலர் ஒன்றை வெளியிடும் நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தினரைப் பாராட்டு கின்றேன். இளம்வயதில் ஆச்சார்யப் பட்டம் பெற்றவர். இளம் குருக் களுக்குப் பத்தாண்டுகளின் பின்பு நிறைவுமலர் ஒன்று வெளிவருகின்ற தெனில், அதற்குரியவரின் பக்குவத்தையும், அவர் மீது அவர் வாழும் சமுகம் வைத்திருக்கும் மதிப்பையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது. உண்மையில் இத்தகுதிக்கு சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் மிக வும் ஏற்றவரே. எனக்கு அவரை நன்கு தெரியும் எல்லாருக்கும நல்லவ ராகவும், இனியவராகவும் ஒருவர் இருக்க முடியுமெனில் அவர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் என்பது என்முடிவு. புகழ்வதற்காகக் கூறும் வார்த்தைகள் அல்ல புரிந்ததினால் கூறும் வார்த்தைகள் பணிவு, பக்தி, கல்வியறிவு, நல்லொழுக்கம் முதலான உயர் குணங் களும் தகுதியும் அன்னாரிடமுள்ளன. அவை அவருக்கு மிகுந்த அடக் கத்தைத் தந்துள்ளன எனக் கருதுகின்றேன் சைவ உலகு அவரது திறனை முழுமையாகப் பயன்படுத்த வேண்டுமென வாழ்த்துதுகின்றேன்.

பிரதேச செயலகம், 
யாழ்ப்பாணம். 
25-05-93

கலாநிதி குணராசா 
(செங்கை ஆழியன்)

புதிய உயர்கல்லூரி தமிழ்த்துறை விரிவுரையாளரும்,
சமநலச்சேவைத் திணைக்கள தலைமைப்பீட பெரும் பகுதி
அலுவலரும் ஆகிய

நா. குழந்தைவேலு B. A. (Hons) அவர்கள் வழங்கிய

# பாராட்டுரை

சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B. A அவர்களின் ஆச்சாரியாபிஷேக குருப்பட்ட பத்தாவது ஆண்டு நிறைவையும் அவரது நூலான ''ஆலயவழிபாடும் தத்துவமும்'' என்னும் நூலையும் வெளியீடு செய்யும் நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தின் சேவையைப் பாராட்டுகின்றேன்.

''எண்ணரிய பிறவிகளில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காணே
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
யாது வருமோ அறிகிலேன்'' என்ற ஞான வாக்கில் தாயுமானவர் மானிடப் பிறவியின் மாண்பினைப் போற்றுகின்றார். இவ்வுலக வாழ்க்கையில் பிறிதொன்றினையும் நாடாது இறை தொண்டினையே இலட்சியமாகக் கொண்டு வாழப்பழகிக் கொண்ட என் ஆயிரக்கணக்கான மாணவச் செல்வங்களுக்குள் குறிப்பிடத்தக்க சிறந்த ஓர் மாணவனாக என்னிடம் படித்த காலத்திலும் பட்டதாரியாகி என்னுடன் ஆசிரியராகப் படிப்பித்த காலத்திலும் சிறந்து விளங்கியவர் சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் B. A. (இலங்கை) அவர்கள்.

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும்'' தந்த அப் பரம கருணாநிதிக்கு நன்றி செலுத்தி, உய்வுபெறுவதே இம்மானிடப் பிறவியின் உன்னத நோக்கமாகும். எனினும் இந்நூலாசிரியர் குருவழிபாட்டினூடாக அவ்விலட்சியத்தை அடையும் அற்புதமான வாழ்வு நெறிபெற்றமை நயக்கத்தக்கதுமன்றி வியக்கத்தக்கதுமாகும்.

தன்னையும் அறிந்து தான் எடுத்த பிறவியின் நோக்கத்தையும் அறிந்த. தன்னைப்படைத்த தலைவன் தாளினைப் பற்றும் வழிவகைகளும் அறிந்து வாழ்வதோடு பிறரும் அளிந்து வாழ வழிகாட்டும் சொற்விற்பன்னராக விளங்குவது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியதாகும்

'' இந்த சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுவதற்கே ஆகும்'' என்ற நாவலர் பெருமானின் அருள்வாக்கிற்கு அமைவாக வாழும் ஓர் இலட்சிய புருஷன்.

'' என்னை நன்றாக இறைவன் படைத்தான் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே'' என்ற திருமூலரின் திருவாக்கிற்கமையவே ஆலயக் கிரியை நெறியை யட்சரம் தவறாதாற்றும் அர்ச்சகர் தமது சமூக நிலையாலும், பிறந்த இடத்திற்கேயுரிய மாண்புமிகு சிறப்பாலும், பெற்ற கல்வித் தரத்தாலும், பெரியோர் துணையாலும் பெரும் பதவிகளைப் பெறும் வாய்ப்பினை இந்நூலாசிரியர் பெற்றிருந்தும் ஆலய அர்ச்சகராகப் பணியாற்றி ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிகாட்டுய் பணியை நினைக்கும் தோறும் நாவலர் பெருமானின் வாழ்க்கை ஞாபகத்திற்கு வராதுவிடாது.

இந்நூலாசிரியர் சைவத்தமிழ் உலகிற்கு குறிப்பாக உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் ஆக்கி அளித்த வேதங்கள் அறுவகை சமயநெறி, அறநெறி, நல்லறம், கிரியைகள் ஆகிய நூல்கள் வரிசையோடு இப்பொழுது வெளிவரும் ஆலய வழிபாடும் தத்துவமும் என்னும் நூல் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், சைவசமய ஆர்வலர்க்கும் பெரும்பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை. நூலாசிரியருக்குப் பருத்தித்துறை நெல்லண்டை அருள்மிகு பத்திரகாளி அம்மன் அருளால் மேலும் பல நூல்களை எழுதி வெளியிட்டு மாணவ உலகிற்கு அளிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். ஆசிரியரை நாகர்கோயில் மணற்கும்பியில் ''மணலிலும் பலவே'' காலம் வாழ வேண்டும். என்று வாழ்த்தி, அவர் பணிசெய்து சிறக்க வாழ்த்துக்கூறிப் பாரட்டுவதில் '' ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தாய்போல் மகிழ்ச்சியடைகின்றேன்.

நெல்லண்டையான் வெளியீட்டுக் கழக வித்துவாலோசகர்களும் போசகர்களும் கௌரவ உறுப்பினர்களும் நிறைந்த ஆளுமையையும் நல்லொழுக்கத்தையும் நயம்பட நல்கி இவ்வாசிரியரை ஊக்கி ஆதரித்து வருகின்றமையைப் பாத்துப் பராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கமநலசேவைத் திணைக்களம்.
26-08-93

நா. குழந்தைவேலு B. A. (Hons)

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர்
**கலாநிதி அ. சண்முகதாஸ் (M. A PhD)**
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் **B. A** எழுதியுள்ள ஆலய ''வழிபாடும் தத்துவமும்'' என்னும் இந்நூல் அளவிலே சிறியதாயினும் நல்ல பொருளை எடுத்துக் கூறுகின்றது நூலினுடைய தொடக்கமாக

மனிதன் என்றால் நினைப்பவன் என்று பொருள்
நல்ல நினைப்புடைய மனிதன் இனிமையாக வாழ்க்கையைச்
செலுத்த சிவ வழிபாடு செய்தல் வேண்டும் சிவம் என்பது
மங்களமுடையது மங்களமுடைய பொருள்களைப் பெற
வழிபாடு சிறந்தது''

என்று அமைவது வழிபாட்டினுடைய பொருளை எளிமையாகப் புலப்படுத்துகின்றது. சிறிய வாக்கியங்களாக, தர்க்க நடையிலே அவை அமைந்திருக்கின்றன. வழிபாட்டினுடைய தேவை என்ன என்பதை விளக்கும் முதலாவது பகுதிக்கு நல்ல தொடக்கத் தொடர்களாக அமைகின்றன

'கோயில்' 'கடவுள்' என்னும் திருப்பெயர்களின் பொருளை இரண்டாவது பகுதி கூறுகின்றது. எங்களுடைய கோயிற் பண்பாடு மூன்றாவது பகுதியிலே விளக்கம் பெறுகின்றது. ஆலயத்தினுடைய காட்சி வடிவும், கருத்து வடிவும் பற்றியும் வழிபடும் முறைகள் பற்றியும் கோபுரம், இராஜகோபுர - தத்துவமும் பற்றியும், பலிபீடம், மூர்த்தி, கோயில், மரம் வணங்கும் முறை என்பன பற்றியெல்லாம் அடுத்தடுத்து வரும் பகுதிகளெல்லாம் விளக்குகின்றன

இறைவழிபாடு செய்யும் பொதுமக்கள் பலரும் படித்து விளங்க வேண்டிய பல நல்ல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. எளிமையான தமிழ் நடையிலே எழுதப்பட்டிருப்பதால், அவற்றைப் பொதுமக்கள் சிக்கலின்றி விளங்கிக் கொள்வார்கள்.

இந்நூல் மாணவர்களுக்கும் பயன்தரக்கூடியவொன்றாக அமைந்துள்ளது. இதுபோன்ற சிறிய சிறிய நூல்கள் மாணவர்களுக்குத் தெளிவான விளக்கத்தைத் தரத்தக்கனவாக வெளிவருதல் இக்கால நிலைமைக்கு ஏற்றதொன்றே. சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் மேலும் பல நூல்களை எழுதி வெளியிட நெல்லண்டை அருள்மிகு பத்திரகாளியின் அருள்வேண்டி, ஆசிரியருக்கு என்வாழ்த்துக்களை கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்

தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.
26-08-93

பேராசிரியர் கலாநிதி
**அ. சண்முகதாஸ்**

புதிய உயர்கல்லூரி அதிபரும், இந்து நாகரீக விரிவுரையாளருமான

**திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள் வழங்கிய**

# உண்மையுரை

'' ஆலயம் தாமும் அரனெனத் தொழுமே '' என்கின்றது சிவஞான போதம் '' ஆலயம் தொழுவது சாலவும் நன்று '' என்றார் ஔவையார். கோவில் விளங்க குடி விளங்கும் என்பது நம் முன்னோரின் அனுபவமொழி காலையும், மாலையும் கைதொழுவார் மனம் ஆலயமாகும். இவற்றையுணர்ந்து 'ஆலய வழிபாடும் தத்துவமும்' என்ற நூல் ஆசிரியரால் எழுதப்பட்டது என்பது உண்மை. மக்கள் பண்பாடே கோயிற் பண்பாடு எனலாம். இம் மக்கள் உய்வடையும் வண்ணம் ஆலய வழிபாட்டின் தத்துவம் விளக்கப் பட்டிருக்கின்றது.

இக்கால கட்டத்தில் இந்நூல் வெளியிடுவது மிகவும் வரவேற்கத் தக்கதே. இந்நூலை முழுமையாகப் பார்வையிட்டேன். திருவருட் தோற்றம், திருப்பெயர்த் தத்துவம், ஆன்மாவும் ஆலயமும், ஆலயத்தின் உயர்நிலை, ராஜகோபுர தத்துவம், கொடிமரத் தத்துவம், பிரகார தத்துவம், கருவறைத் தத்துவம், இயந்திர தத்துவம் ஆகிய உண்மையில் உணர்ந்தே மிகவும் எளிமையாக விளக்கப்பட்டுள்ளன.

இந்நூல் ஆசிரியர் அன்பும், பணிவும் மிக்கவர் மென்மேலும் நல்ல குருவருள் பெற்று சிறந்த திருவருளோடு. சமயத்திற்கும், தமிழிற்கும் அளப்பெரும் சேவையாற்ற வேண்டும் என அன்றாடம் இறைவனைப் பிரார்த்தித்து உண்மையுரை வழங்குகின்றேன்.

புதிய உயர்கல்லூரி<br>ஆரியகுளம் சந்தி,<br>யாழ்ப்பாணம்.<br>26-08-93

**திருமதி S. அருள்நங்கை**

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை-
முதுநிலை விரிவுரையாளர்

## எஸ். சிவலிங்கராஜா M. A. அவர்கள் வழங்கிய

# மதிப்புரை

"கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் கட்டளை. சைவர்களாகிய நாம் எமது நாளாந்த கடமைகளைக் கோயில்களோடு சேர்த்தே செய்து வருகிறோம், சைவப் பண்பாட்டினை "கோயிற் பண்பாடு" என்று கூடச் சொல்லலாம். ஈழத்துப் பண்பாட்டு பாரம்பரிய அம்சங்களிலே கோயில் சிறப்பான இடத்தை வகித்து வந்துள்ளது. கோயிற் பூசகர்கள், குருக்கள்மார் வழிபடுவோரால்நன்கு மதிக்கப்படும் வழக்கம் பண்டைக்காலம் தொட்டே நிலவி வந்துள்ளது இடைக்காலத்திலே சில தடங்கல்கள் அவ்வப்போது தலை காட்டினாலும் எமக்கு கோயிற்குரு "குருக்கள் ஐயா" ஆகவே இருந்து வந்துள்ளார்

கோயிற்பண்பாட்டு கலாச்சார அம்சங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தது: அதற்குப்பல காரணங்கள் உளவேனும் முனைப்பான காரணிகளாக இரண்டினைக் குறிப்பிடலாம். ஒன்று ஆலயம் சூழலில் உள்ளவர்கள் வந்து ஒன்றாகக் கூடியிருக்கும் ஒருதளமாக ஆலயம் அமைந்தமை இரண்டாவது ஆலயப் பிரதமகுரு கல்வியாளராகவும் வணக்கத்திற்குரிய பண்புகள் கொண்டவராகவும் திகழ்ந்தமை.

எமது கோயிற் பண்பாட்டினை முன்னெடுத்துச் சென்ற மிக முக்கியமான காரணம். முற்குறிப்பிட்ட இரண்டாவது அம்சமே எனலாம். ஆலயக் குருவிடம் கல்வி, ஒழுக்கம், அனுபூதி, அறிவு, இரக்கம், தெய்வீக அருள் என்பன இருக்கவேண்டுமென சைவச்சமூகம் எதிர்பார்த்தது. இவை நிரம்பப்பெற்ற குருக்கள்மாரை மக்கள் போற்றி மதித்து துதித்தே வந்துள்ளனர்

இத்தகையதொரு பண்பாட்டு அருத்தொடர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் பண்புடையோராகச் சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் காணப்படுகின்றார். நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனின் திருமேனி தீண்டும் பாக்கியம் பெற்றவர். அப்பதியிலுள்ளோரால் நன்கு மதிக்கப்படுபவர் அனுபவ அறிவும், கல்வி அறிவும் நன்கு வாய்க்கப் பெற்றவர். நல்லாசிரியர்களைத் தமது குருவாகப் பெறும் பாக்கியம் பெற்றவர்.

"ஆலய வழிபாடும் தத்துவமும்" என்னும் இச்சிறுநூலை அவர் ஆக்கித் தந்துள்ளார். இன்றைய காலகட்டத்திலே இப்படியொரு நூல் வருவது வரவேற்கத்தக்கது. ஆலய வழிபாட்டின் தத்துவத்தினை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள ஒரு வழிகாட்டியாக இந்நூல் அமைகின்றது. அத்துடன் மாணவர்களின் பரீட்சைத் தேவைகளையும் ஓரளவுக்குப் பூர்த்தி செய்யக் கூடியது.

இலகுவான நடைமுறையில் ஆலயவழிபாட்டுத் தத்துவத்தை விளக்கியிருக்கிறார். ஈழத்திலே ஆலயவழிபாட்டு மரபுகளை தத்துவங்களை விளக்கிய பலநூல்கள் எழுந்தன. குறிப்பாகப் 19-ம் நூற்றாண்டிலே இத்தகைய நூல்கள் பெருமளவுக்குத் தோற்றப் பெற்றன. அன்றைய சமூகத்தை நன்னெறிப்படுத்த இவை உதவியுள்ளன.

இந்நூலின் ஆரம்பத்தில் அமைந்துள்ள பத்திரகாளி அம்மாள் திருவடிப் பதிகம் பக்திச்சுவை நிரம்பியதாக அமைந்துள்ளது. அபிராமிப் பதிகத்தின் சாயல் கொண்டதாக இது அமைகின்றது. ஆசிரிய பத்திரகாளியோடு ஊடாடிப் பழகுபவர் என்ற உண்மை இப்பதிகத்தினூடு புலப்படுகின்றது.

"வாழ்க்கைக் கடலிற் சிக்கித் துன்புறும் மக்களுக்குத் திருக்கோவில்கள் மன அமைதியையும் இன்பத்தையும் அளிக்கும் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன" என்று ஆசிரியர் குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது.

சிறிய சிறிய தலைப்புக்களாகப் பகுத்துப் பாரிய உண்மைகளை விளக்கியிருக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது. "எழுதப்படிக்கத் தெரிந்த அனைவருக்கும்" விளங்கக் கூடியவகையிலே இந்நூலாசிரியர் உயர்ந்த தத்துவங்களை விளக்கியுள்ளார். விரிவான உதாரணங்களுடன் விளக்கவேண்டிய பல விடயங்களை ஆசிரியர் விளக்கமாகக் குறிப்பிட்டிருப்பது விதந்து பாராடடத்தக்கது.

நல்லாசிரியர்களைப் பெற்ற இந்நூலாசிரியர் எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரித்தானவர். அவரதுபணி என்றும் தொடரவேண்டும் என வாழ்த்துவோம்.

விரிவான முறையில் ஆலய வழிபாடு பற்றிய நூலொன்றை ஆசிரியரிடமிருந்து சைவ உலகம் எதிர்பார்க்கின்றது.

*தமிழ்த்துறை,* *முதுநிலை விரிவுரையாளர்*
*யாழ். பல்கலைக் கழகம்.* **எஸ். சிவலிங்கராஜா M A.**
27-08-93

# முன்னுரை

திருக்கோயில்கள் கலைகளில் தாயகமாக விளங்கும் சமுதாய வாழ்வின் மையமாக அமைந்த தன்மையைப் பல சான்றுகள் மூலம் அறிஞர்கள் நிறுவியுள்ளார்கள். ஒவ்வோர் திருக்கோவில்களும். ஒவ்வோர் பகுதி மக்களின் வாழ்க்கைக் கலைப் பொக்கிசங்கள் ஆகும். இக்கோவில்கள் கலைக் கருவூலங்களான இசை, நாட்டியம், நடனம் கட்டிடம், சிற்பம் போனற பலதுறை வளர்ச்சியின் நிலைக்களனாக உள்ளன. ஊர்கள் தோறும் கோவில்கள். நாள்கள் தோறும் நல்ல பூசை வழிபாடுகள், திங்கள் தோறும் திருவிழாக்கள், பெருவிழாக்கள் தேரோட்டங்கள் தெப்ப உலாக்கள். இசை மழைகள், கண் காதிற்கினிய நிகழ்ச்சிகள் யாவும் வளர்ந்து சமுதாயத்தின் வாழ்வு நெறிகளாகி இற்றைவரை நடைபெறுகின்றன.

இவற்றிற்கு அடிப்படை வழிபாட்டு முறைகள் ஆகும். இவ் வழி வழிபாட்டு முறைமைகள் நெறியான முறையில் சரியாகக் கடைக் கொள்ளாவிடின் மேற்குறிப்பிட்ட வகையில் ஒருவித பயனும் இல்லாமற் போய்விடும் இதனைக் கருத்தூன்றிச் சிந்தித்தே ''ஆலய வழிபாடும் தத்துவமும்'' என்ற சிறுநூலை சகலரும் மிக எளிமையாக விளங்கிக் கொள்ள உருவாக்கினோம் இந்நூல் ஆச்சார்யாபிஷேக குருப்பட்ட பத்தாம் ஆண்டின் நிறைவை நிலைப்படுத்திய எனலாம். இந் நெருக்கடியான காலகட்டத்தில் இந்நூல் மலர்வது இந்துசமயம், இந்துநாகரீகம், முகற்கலைத் தேர்வு, இறுதிக்கலைத்தேர்வு ஆகியவற்றை சிறப்புப் பாட நெறியாகப் பயிலும மாணவர்க்கு உதவவேண்டும் என்றும் ஆலயத்தின் அருமையையும், வழிபாட்டின் தத்துவ தையு, சகலரும் ஓரளவிற்கேனும், அறிந்து கொள்ள வேண்டும் எனும் நோக்கோடாகும். சைவசித்தாந்தம் இந்துக்களின் முடிந்த தெளிந்த முடிவான தத்துவங்களை விளக்குகின்றது. சிவஞ்ஞான போதத்தில் ''மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம் தானும் அரனெனத் தொழுமே'' என்பதற்கிணங்க ஆலயங்கள் சிறந்த மூலாதாரமாக விளங்குகின்றன.

வருடாவருடமாவது மக்களுக்கு சிறந்த நூல்களை உருவாக்கிச் சேவை செய்ய வேண்டுமென்று பணித்த சிறிய தந்தையார் க. சோமசுந்தரம் அதிபர் அவர்கட்கும் என்றும் கடமைப்பட்டுள்ளேன். நூல் முழுமையும் பரிசோதித்து பற்பல திருத்தங்கள் செய்தும் சிந்தனையைத் தூண்டி, வேண்டுவன கூட்டியும், துணை புரிந்த எனதன்பிற்ரிய ஆசிரியரும், பாலபண்டிதருமான மு. வேலாயுதபிள்ளை டிப்ளோமா (Dip-in-Tamil) அவர்களின் இப்பரோபகாரமாகிய பெரு நன்றியை யான் மறவாமற் பாராட்டும் துணையேயன்றி பிரதியுபகாரம் கண்டிலன்.

எனது ஆத்மா நலமாகும் நல்ல குருநாதர்களான சமஸ்கிருத பண்டிதர் பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா அவர்களும் சிவஸ்ரீ கந்த சிவபாதசுந்தரக் குருக்கள் ஐயா அவர்களும், மானசீக குருவாக விளங்கும் நீர்வேலி கந்தசுவாமி கோவில் பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திரக் குருக்கள் அவர்களும் எமக்கு நன்னெறியுய்த்தவர்கள், மேலும் பருத்தித்துறை சிவன் தேவஸ்தான பிரதமகுரு தா. வாசுதேவக்குருக்கள் அவர்கட்கும், நாயன்மார்க்கட்டு ஸ்ரீ அரசடிப்பிள்ளையார் தேவஸ்தான பிரதமகுரு ச. மகாலிங்க சிவக் குருக்கள் அவர்கட்கும், வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதமகுரு சமாதான நீதவான் சோ தண்டபாணிக தேசிகர் அவர்கட்கும், மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயக தேவஸ்தான அறங்காவலரும், குருவுமான சு. சிவசண்முகானந்தக் குருக்கள் அவர்கட்கும், இந்துமத குருமார் ஒன்றியத் தலைவருமாகிய பிரம்ம ஸ்ரீ ஐ. கை வாமதேவக் குருக்கள் அவர்கட்கும், எனது தந்தைக்கும் மிக்க அறிவு தருபவரான முடிக்கொற்றாவத்தை சித்திவிநாயகர் ஆலய பிரதம குருவுமாகிய ம. ச வேதாரண்யக் குருக்கள் அவர்கட்கும், எனது நன்றியுரிமையைச் செலுத்துவது எமக்கு நாமே சொல்வது போன்றதே.

ஆழ்ந்த நுண்மாண் அறிவு நலமாக்கும் நல்ல குணவாசான்களான யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும், சிரேஷ்ட முதுநிலை விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா அவர்களுக்கும், புதிய உயர் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் நா. குழந்தைவேலு B. A. ( Hons ) அவர்களுக்கும், புதிய உயர்கல்லூரி அதிபரும், இந்து நாகரீக விரிவுரையாளர் ஸ்ரீமதி. அருள்நங்கை சண்முகநாதன் அவர்களுக்கும், உதிய உயர்கல்லூரி புவியியல் விரிவுரையாளரும், பிரதேச செயலாளருமாகிய கலாநிதி க. குணராசா ( செங்கை ஆழியான் ) அவர்களுக்கும் பண்டிதர் வித்துவான், இலக்கண வித்தகர் க. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும், என் நன்றியுரையைக் கூறவேண்டுமாயின் அது வார்த்தைகளால் இயலாது " நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒரு போதும் இருந்தறியேன் " என்ற ஆப்த வாக்கியத்தை அவர்கள் எல்லோருக்கும் அன்புடனும், வணக்கத்துடனும் சமர்ப்பிக்கின்றேன்

எனது ஆச்சார்ய குருப்பட்டாபிஷேக பத்தாவது ஆண்டு நிறைவை விழாவெடுக்க வேண்டுமென்று நினைத்து நடாத்திய நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தினர்க்கும் வாழ்த்துக்கள் அனுப்பிய ஆசிரியர் சீ. சிவப்பிரகாகம் அவர்கட்கும் இளைப்பாறிய அதிபர் மு. பொன்னையா பண்டிதர் அவர்கட்கும், தோட்டக்கடவை வைரவர் தேவஸ்தான பூசகர் சி. கார்த்திகேசு அவர்கட்கும் மிக்க நன்றியறிதலைச் செலுத்துகின்றேன்.

மேலும் நெல்லண்டை சனசமூக நிலையம் சார்பில் வாழ்த்துரை அனுப்பிய நா. விஜயரட்ணம் அவர்களுக்கும், தும்பளை கிழக்கு சன சமூக நிலையம் சார்பாக வாழ்த்துரை வழங்கிய சட்டத்தரணி பா. சுப்பிரமணியம் அவர்களுக்கும். யாம் குருசேவையாற்றும் அம்பிகையின் அருள் சுரக்க பணியாற்றிவரும் தர்மபரிபாலன சபை சார்பில் வாழ்த்துரை அனுப்பிய சட்டத்தரணி சபா. ரவீந்திரன் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

நூலக சேவைக்கரும் பணியாற்றிய பல்கலைக்கழக மாணவன் தம்பி க. யோகநாதனுக்கும், மற்றும் பாலிய சினேகிதனு', பயனுடை இலட்சியத்திற்குப் பணிபுரியும் உயிரினிய இதய நண்பன் இ த். யோக மூர்த்திக்கும் மேலும் அன்புபெருக நாம் பூஜிக்கின்ற அம்பிகையைத் தினமும் வேண்டுகின்றேன்.

மிகவும் நெருக்கடியான காலகட்டத்திலும், குறுகிய நேரத்திலும் சிரமம் பாராது இரவு பகல் தொடர்ந்து மலரினை உருவாக்க உதவிய குமார் அச்சக அதிபர் திரு. ச. காந்திதாசன் அவர்களுக்கும். அங்கு வேலை பார்க்கும் சகல ஊழியர்களுக்கும் அன்பு கனிந்த இனிய நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன்

வழமைபோல் இந்நூலையும் அழகுற அமைப்பதற்கு எனக்கு பல வழிகளிலும் ஊக்கந்தந்துதவிய அனபுக்குரிய நண்பன் தம்பு. இராமச் சந்திரனுக்கும் எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்,

ஓம் பூர்ணமத பூர்ணமிதம் பூர்ணத் பூர்ணமுதச்பதே!
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஸிஷ் யதே!!

ஓம் சாந்தி!
சுபமஸ்து

**இ. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**

நெல்லண்டை பத்திரகாளி
அம்மன் கோவில்
அர்ச்சகரும், பிரதமகுருவும்,
தும்பளை, பருத்தித்துறை

உ
சிவமயம்
வடமராட்சி
நெல்லண்டைப் பதியிலெழுந்தருளியிருக்கும்

# பத்திரகாளி அம்பாள் மீது

பாடிய

# திருவடிப் பதிகம்

## விநாயக வணக்கம்
வெண்பா

பத்தி வளர்விர பத்திரன்றன பாங்கிலுறை
சித்திதரு மன்னைமேற் செந்தமிழா — லித்தலத்தின்
நாயடியேன் பாடவைங்கை நால்வாய்நன் முன்றுவிழித்
தூயனிரு தாளே துணை.

## நூல்
ஆசிரிய விருத்தம்

சீரோங்கு யாழ்ப்பாண வடமராட் சிப்பகுதி
செயமோங்கு நெல்லண்டையாரு
செப்பரிய பதியினில் வாழ்பத்ர காளியே
சிறியனுன் மேற்பாடிடப்
பேரோங்கு கலைவாணி யென்னாவி லனுதினம்
பிரியா திருக்க வேண்டும்
பேசரிய சொற்சுவைகள் சந்தம் பொருட்சுவைகள்
பேதமில் லாது வேண்டும்
நேரோங்கு மென்சித்த நின்பாத கமலத்தி
னினைவுதவ றாதுவேண்டும்
நித்யபரி பூரணி காரணி நாரணி
நேர்முகம் வந்தருளுவாய்
பாரோங்கு மடியர்துதி யமுதாக வுண்ணுநீ
பாவிக் கிரங்கு தேவி
பத்தரின் சித்தமிசை குடிகொண்ட வம்மையே
படைப்பத்ர காளிதாயே

உன்னையல் லாதெனக் கோருதவி யில்லையே
யுற்றுப்பார் பெற்றவம்மா
ஓங்காரி றீங்காரி யாங்காரி முக்கோண
வொருசக்க ரத்துணின்று
முன்னைவரு நின்கணம் பன்னிரண் டாயிரம்
மொழியவரு பரிகலங்கள்
முற்றா வுனைச்சூழ நற்கொலு விருக்குநீ
முடனெனைக் காப்பதரிதோ
என்னைநீ வாவென் றழைத்துமின் கையினா
லேந்திமடி மீதிருத்தி
இத்தருண செனனத்தின் முதியவுப தேசமொன்
றியம்பிட வெழுந்தருளுவாய்
அன்னையே யுனைநம்பு மடியேனை வாழச்செய்
தஞ்ஞான் விருளகற்றி
அகிலத்தி நெல்லண்டை தனில்முனிவர் துதிசெய்ய
வமர்பத்ர காளிதாயே

ஐயனும் மிருளனும் மருளனும் விறுமனும்
மாடிவரு காடேறியும்
அக்கிரஞ் செய்யுதிர காளியுங் கூளியும்
மாதிவயிரவனு மாகித்
துய்யசெய வாச்சியந் தொந்தொமென் றொலிசெயத்
தொல்லுலகில் வீதிதனிலே
சொல்லரிய பரிகலஞ் சூழவே சிவிகையிற்
சோதிநீ வருபவனியை
வையமிசை யான்செப்ப மடையனா லாகுமோ
வந்தெனக் கருடருகுவாய்
வண்டனின் னடியினைத் தெண்டனிட் டேனம்மா
மதுரகவி பாடவருவாய்
செய்யபரி பூரணி கலைகள்பதி னாறுடன்
செப்பரிய நெல்லண்டையிற்
றீதற்த வடியார்க ௫திபுரிய வாழ்தேவி
செயபத்ர காளிதாயே

தவமிக்க தக்கனது தலையதைப் பலிகொண்ட
தருவீர பத்திரற்குச்
சத்தியென வந்திடப் பாகமது கொண்டண்ட
சராசரத் துயிருமானாய்
புவனத்திற் கயவர்கா முகர்தமைப் பொடிசெய்த
போதமெஞ் ஞானதேவி
புன்னெறி களைந்தெனது நெஞ்சினி லிருந்துநீ
புதுமதுர கவியருளுவாய்

அவநீத மாயிந்த வேழை னுனைநம்பி
யாற்றொணாப் பிறவிநோயில்
அவனியி லுதிக்கவு மிறக்கவும் விதியிதோ
வன்னையுன் மனங்கல்லதோ
பவநீக்கி யெனையாள விதுதருண மம்மையே
பாலனின் னடிமையன்றோ
பகாவரு நெல்லண்டை தனில்மேவி வாழ்வுபெறு
பதிபத்ர காளிதாயே

பெண்ணென்று சிசுவென்று பெற்றதாய் தமரென்று
பேருலகிற் கொடியபாசப்
பேய்பிடித் தெனையாட்ட வுனதடியை நினையாத
பேயன்மா பாவியம்மா
மண்ணென்று பொன்னென்று நினையாம லென்மனம்
மாதாநின் கழல்ஞானமே
வந்துகுடி கொள்ளவுந் தந்துவர மருளுவாய்
வடகட லுகந்ததேவி
கண்ணிலா னந்தநீர் துன்னியே சொரியவுங்
கபடவஞ் சனையோடவுங்
கருதரிய நின்னடி கடாட்சமே யாகவுன்
கண்ணினா லென்முகம்பார்
விண்ணிலா னந்தமரர் வந்துதுதி புரியவும்
மேதினியி னெல்லண்டையில்
வீற்றிருந் தன்பர்வினை யோட்டியே வாழ்வுபெறு
மிகுபத்ர காளிதாயே

பண்டுசெய் வினையிதோ தொண்டனின் னடியினைப்
பரவித் துதிக்கவறியாப்
பாவியான் மாபாவி யென்போலு மொருபாவி
பாரின்மிசை யாருமுளரோ
தெண்டனிட் டுன்னையே நின்றுகும் பிட்டெனது
தீதகற் றென்றாலு நீ
திரும்பியும் பாராது கைவிடுத னீதியோ
சிறியன்வே றெங்குசெல்வேன்
கண்டுனைத் துதிசெய்த காளைக்கு மருடந்து
கருதுமகி லாண்டவல்லி
கடையேனை யுங்கடைக் கண்ணினாற் பார்த்தெனது
கவலைதீர்த் தருள்புரிகுவாய்
சண்டன்விடு தூதரெனைக் கண்டஞ்சி யோடநற்
றவமெனக் கருளுமம்மே
தாரணியி நெல்லண்டை தனில் மேவி வாழ்வுபெறு
சயபத்ர காளிதாயே

அன்னையே யுன்னையென் நெஞ்சினி லிருத்தியா
னர்சனை நிதம்புரியவும்
ஐம்பத்தொ ரட்சரமியங்கு முயிரென வுன்ற
னடியினன் பூச்சொரியவும்
யின்னைவரு காலனுக் கஞ்சாம லானந்த
பேரினப நிட்டையருள்வாய்
பேசரிய மகிடனொடு நடனமிடு தேவிநீ
பேய்ச்சியென நிற்பவளு நீ
முன்னையே யானுடன் றில்லையிற் காளியென
முடுகிநட னஞ்செய்த நீ
மோனமே யெனதன்பில் ஞானமே யருடந்து
முடனைக் காத்திடம்மா
உன்னையே யென்மனத் துயரெலா மோட்டென்ன
வோதிநின் றுருகினேனே
யோங்குபுகழ் நெல்லண்டை தனில்மேவி வாழ்வுபெறு
முயர்பத்ர காளிதாயே

ஒன்றெனப் பலவாகி நின்றுவர மருளுநீ
யோரெட் டெழுத்து நீயே
ஓதரிய மானுடச் செனமம தெடுத்து நா
னுலகத்தி னிற் பாசமென்
குன்றுபோ லென்பவக் கொடுவினை யகற்றிநின
குற்றேவல் செய்யவருள்வாய்
கொடுகூளி தன்னைநீ திரிசூல மேந்தியே
கூச்சலிட வாட்டிவிடுவாய்
கன்றைப் பிரிந்தலறு மாவினைப் போலயான்
கதறிப் புலம்பியுன்றன்
கழன்மேவு சந்நிதியின் வந்தடைந்தேனம்மா
காப்பதுன் கடமையன்றோ
என்றென்று மடியார்கள் கண்ணான தேவியே
யென்கவலை நீக்கிவிடுவாய்
இயன்மேவு நெல்லண்டை தனிலுற்று வாழ்வுபெறு
மிறைபத்ர காளிதாயே

எத்தனை விதங்கடான் சொன்னாலு நின்மன
மிரங்கா திருப்ப தேனோ
என்றெனது கன்மமோ வுன்றனது குணமிதோ
வேதென்று யானறிகிலேன்
நித்தஞ் சராசரச் சத்தியாய் நிலவுநீ
நேத்திர மாயிரமுளாய்
நிர்முடனுக்குன் கடாட்சம்பா லிக்கநன்
னேர்முகம் பாருமம்மா

முத்தருஞ் சித்தரும் பத்தரு முன்னையே
முதுகவியி னிற்பாடினார்
மூவுலக மெங்கணுந் தானாய் முளைத்தநீ
முக்கோண வாலை தேவி
அத்தன் னிடப்பாக முற்றபரி பூரணீ
அடியனின் னடிக்கபயமே
அகிலத்தி நெல்லண்டை தனில்மேவி வாழ்வுபெறு
மருள்பத்ர காளிதாயே

நாடிநின் சன்னிதியி னிருகரங் கூப்பியான்
நற்றவம் புரியவென்றால்
நானென்று வைந்துபெயர் முன்னிற்று போராடி
நாயேனை யுந்தடுக்க
ஓடியொரு நொடியினிற் சமூகம தழித்துநீ
வொன்றாக வென்சித்தமும்
உனதடியி னுருகிவரு மமுதது பருகவும்
உற்றென் முகம் நோக்குவாய்
தேடிவந் தேனம்ம போடவெனை வையாது
சிக்கென வெடிக்கிமடியில்
தீராத பிறவிநோய் தீர்த்தென்னை மோந்துனது
செங்கமலப் பாதமருள்வாய்
கூடிவரு நின்கணங் குற்றேவல் செய்கூளி
கோஷ்டமிக தானொலிக்க
கோதிலா நெல்லண்டை மீதிலே வாழ்வுபெறு
கோபத்ர காளிதாயே

புந்திபுன் னெறியினிற் றங்காது நின்பாத
பொன்மல ரெனக்கருளவும்
போதமெஞ் ஞானநிலை யுடையநின் னடியரொடு
போக்குவர வெற்கருளவும்
தந்திதன மடவார்கள் யாவருந் தாயெனத்
தமியனேற் கருள்புரியவும்
சந்தையிற் கூட்டமித் தரணிவாழ் விற்பாசந்
தள்ளிவிட் டருள்புரியவும்
செந்தில்வடி வேலனே முருகவென் றவனடிகள்
சிந்திக்க வருள்புரியவும்
செப்புகவி பதினொன்றி லுள்ளபிழை நீக்கியிச்
சிறியனேற் கருள்புரியவும்
தொந்தோமென நினதமரர் வந்துதுதி புரியவுந்
தொல்புவியி நெல்லண்டையிற்
றாயபதி தனனிலுறை சோதியே யாதியே
சுகபத்ர காளிதாயே.

வாழி

ஐங்கரனு மரணரியு மயனும் வாழி
அரசர்செங்கோல் புலவரா னினமும் வாழி
திங்கடொறு மும்மாரி பொழிந்து வாழி
செவ்வேளும் வள்ளிதெய்வ யானைவாழி
பங்கமிலா மகர்கற்பு நெறியும் வாழி
பார்மீதிற் றீதொழித்த மறையோர் வாழி
துங்கமுள நெல்லண்டைப் பதியில் வாழுந்
சோதிபத்ர காளியம்மை வாழி வாழி.

உ
தேவி துணை

# தும்பளை
# நெல்லண்டை முத்துமாரி அம்பாள்
# பிள்ளைக் கவி

பவளத் தியற்றுங் கலசமிசைப்
பன்னீ ரதனா லுலைவார்த்துப்
பதுமராக வடுப்பில் வைத்துப்
பகருங் கனகத் தழல்கொழுத்தி
திவளும் வைர விறகடுக்கிச்
சிறந்த தவள வரிசிபெய்து
சேர வடித்து நிறணிந்து
செவ்வே யிறக்கிப் பசுங்கிரணந்
தவளும் பச்சை யிலைமீது
தயங்கப் படைத்துச் சராசரங்கள்
தழைக்க வளர்க்கு மருட்கௌரி
தகைசேர் நெல்லி யண்டைவளர்
குவளை விழிச்சி மெய்ஞ்ஞானக்
கொழுந்தே சிற்றில் சிதையேலே
குன்ற முலைச்சி மாரியம்மாள்
கோதாய் சிற்றில் சிதையேலே.

# ஆலய வழிபாடும் தத்துவமும் என்ன தேவை

மனிதன் என்றால் நினைப்பவன் என்பது பொருள் நல்ல நினைப் புடைய, மனிதன் இனிமையாக வாழ்க்கையைச் செலுத்த, சிவவழி பாடு செய்தல் வேண்டும். ''சிவம்'' என்பது மங்களமுடையது. நிறைவு டையது. மங்களமுடைய பொருட்களைப் பெற வழிபாடு சிறந்தது. இதற்காக இறைவன், மனிதனுக்கு ஐம்புலன் ஆகிய கருவிக்கள் அறிவு, இச்சை, செயல் என்ற சிறப்பைத் தந்துள்ளான். ''துன்பமே எந்நாளும் இன்பமில்லை'' என்று மனிதன் ஏங்கி வாழவேண்டியிருக் கிறான். இத்துன்ப வாழ்க்கைக்கு முடிவே இல்லையா? என்று மனித உள்ளம் ஏங்குகின்றது. இச்சை என்பது எல்லையற்றது. ஆனால் இச் சைப்படுகின்ற எல்லைக்குட்பட்ட பொருட்களைக் கணக்கற்ற கைகள் சென்று பற்றுவதால் கலக்கமும் குழப்பமும் உண்டாகின்றன. எல்லை யற்ற ஆசை எல்லையற்ற பொருளை நாடிச் செல்வதே முறை: எல்லைக்குட்பட்ட பொருள் பானை நீருக்கும், எல்லையற்ற பரம் பொருள் கடல் நீருக்கும் ஒப்ப. இந்த உண்மையை உணர்ந்து தம்மை நாடி விரும்பி வந்து வழிபடுவோர்க்குத் தன் அருட்காட்சியைக் கொடுக்கும் பொருட்டு பரம்பொருளாகிய இறைவன் உறைகின்ற இடங்களே திருக்கோவில்கள்.

## திருவருட் தோற்றம்

ஆதியந்தங் கடந்த மேலான இறைவன், எங்கும் எதிலும் நீக்க மற நிறைந்திலங்குபவன், ''பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறை கின்ற பரி பூரணானந்தமே'' என்றும் ''அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து'' என இலங்கும் இறைவன் எங்கும் எதிலும் நிறைந்திருப்பினும், சிறப்பாக ஞானிகள் திருவுள்ளத்திலும், திருக்கோவில்களிலும் விளங்கித் தோன்றி யுள்ளான். உலகில் உள்ள பலவுயிர்கள் உய்யும் வண்ணம் இறைவன் திருக்கோவில்களில் உறைகின்றான் தம்மை அன்புடன் நாடி வரு வோர்க்கு அருள்பாலிக்கின்றான். இறைவன் திருவருட் திருமேனிய னாக எழுந்தருளித் திருக்காட்சி தரும் இடங்களே திருக்கோவில்கள்.

பாலில் நெய் மறைந்திருப்பது போல, இறைவன் எங்கும் எதிலும் மறைந்து நிறைந்துள்ளான். கடைந்த தயிரில் வெண்ணெய் உருண்டு திரண்டு வெளிப்படுவது போன்று, எங்கும் நிறைந்து மறைந்திருக்கும் இறைவன் திருவருட்டிருவடிவினராய்த் திருக்கோவிலில் வெளிப்பட்டு விளங்கிக் காட்சிதருகின்றான்.

நிலத்திற்கடியில் நீர் நிறைந்திருந்த போதிலும், தோண்டிய இடத்தில் தான் நீர் வெளிப்படுகின்றது அவ்வாறே இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் திருக்கோவிலிலேயே வெளிப்பட்டு விளங்கிக் காட்சி தருகின்றார்.

பசுவின் உடல் முழுவதும் பால்மறைந்த போதிலும், மடியின் மூலமாக வெளிப்படுவது போன்றே யாண்டும் எதிலும் இறைவன் மறைந்திருந்தாலும் திருக்கோயிலின் கண் திருக்காட்சியருளும் திருமூர்த்தம் வாயிலாகவே வெளிப்பட்டுத் திருவருள் புரிகின்றார். அவ்வாறே ஞானிகள் திருவுள்ளத்திலும் தோன்றித் திருவருள் புரிகின்றார்.

ஈண்டுச் சிலர்க்கு ஓர் ஐயம் ஏற்படலாம் இறைவன் எதிலும் நீக்கமற நிறைந்தவனாதலால், அவரை யாண்டும் எதிலும் வழிபடலாமே திருக்கோவிலிலேயே வழிபடவேண்டிய தேவையில்லையென்று ஐயுறலாம், இறைவனை எப்படியும் வழிபடலாம் ஆனால் திருக்கோயிலில் வழிபடுவதற்கும்: மற்ற இடங்களில் வழிபடுவதற்கும் உண்டாகும் திருவருட் பயனில் வேறுபாடு உண்டு. மற்ற இடங்களில் இறைவனை வழிபடுவதனாலும் எண்ணித்துதிப்பதனாலும், வழிபடுவோரின் வினைகள் வெதும்புகின்றன. திருக்கோவிலில் வழிபடுவதனால் வினைகள் எரிந்து, வெந்து, கரிந்து, நீராகி விடுகின்றன.

கொடிய வெய்யிலில் ஒரு துணியை வைத்தால், அத்துணி வெதும்புமேயன்றி வெந்து கரிந்து சாம்பலாகாது. சூரியகாந்தக்கண்ணாடியை வெய்யிலில் வைத்து அதன்கீழ் வரும் வெய்யிலில் துணியை வைத்தால் அத்துணி சாம்பலாகி விடுகின்றது. இதிலிருந்து நேர் வெய்யிலுக்கு இல்லாத ஆற்றல் காந்தக்கண்ணாடியின் கீழ் வருகின்ற வெய்யிலுக்கு உண்டு என்பது விளங்குகின்றது. யாண்டும் பரந்து விரிந்து இருக்கும் கதிரவனின் வெம்மையை ஒன்றுபடுத்தித் தன் கீழே காந்தக்கண்ணாடி செலுத்துகின்றது மற்ற இடங்களில் இறைவனை வழிபடுவது, வெய்யிலில் துணியை வைப்பது போன்றதாகும்.

யாண்டும் நிறைந்து மறைந்திருக்கும் இறைவனின் திருவருள் ஒருமுகப்பட்டு வெளிப்பட்டு விளங்கும் இடம் திருக்கோவில். எனவேதான் திருக்கோவில் வழிபாடே சிறந்தது என வற்றுத்தப்படுகின்றது. பசுவின் உடல் முழுவதும் பால் மறைந்திருத்தல் திருக்கோவில, மடியில் உள்ள காம்பு — இறைவன் யாண்டும் நிறைந்து மறைந்திருத்தல் பசுவின் மடி — பூவுலகின் திருக்கோவிலில் உள்ள திருவுருவம் காலையும் மாலையும் காம்பை நீவிப் பாலைப் பெறுதல் — காலையும் மாலையும் திருவுருவத்தை வழிபட்டு அருள்பெறுதல். ''காலையும் மாலையும் தொழுவார் மனம் ஆலயமாகும்'' என்றனர் சான்றோர். வானளாவிய திருக்கோபுரங்களும் விமானங்களும் காண்போருக்குத் தொலைவில் இருந்தபடியே தெய்வ உணர்வைத் தூண்டும் அருள் ஆலயங்கள் நாட்டிற்கும் ஊருக்கும் நல்ல அணிகளாகத் திகழ்கின்றன.

மின்சார அணுக்கள் நிறைந்த இடம் (Powerhouse) அதுபோலத் திருவருள் அணுக்கள் நிறைந்த இடம் திருக்கோவில். எழுத்தின் ஒலிவடிவை உணர்த்துவதற்கு வரிவடிவ எழுத்து நம் முன்னோரால் ஆனது போலத்தான், திருவருள் என்ற ஒலியைத் திருக்கோவில் என்ற திருவடிவம் விளக்குவதாகும்.

வாழ்க்கைக் கடலில் சிக்கித் துன்புறும் மக்கட்குத் திருக்கோயில்கள் மன அமைதியையும், இன்பத்தையும் அளிக்கும் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன.

''கோயில் விளங்கக் குடி விளங்கும்'' என்பது நம்முன்னோரின் அனுபவமொழி.

# திருப்பெயர்த் தத்துவம்

இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்தைக் கோயில் என்றும் 'ஆலயம்'' என்றும் வழங்குகின்றோம். கோயில் என்னும் திருப்பெயர் கோ + இல் எனப்பிரிந்து. கோ—கடவுள், இல்—இருப்பிடம் எனப் பொருள்படும் அஃதாவது கோயில் என்னும் திருப்பெயர் 'கடவுள்' இருப்பிடம்' என்னும் பொருள் குறிப்பதாகும். ஆலயம் என்னும் திருப்பெயர் ஆ—லயம் எனப்பிரித்து ஆ—ஆன்மா, லயம்—சேருவதற்குரியது எனப் பொருள்படும். அஃதாவது, கடவுள் திருவடியில் ஆன்மா சேருவதற்குரிய இடம் என்பதாகும்.

ஆலயம் என்னும் திருப்பெயரில் ''ஆ'' என்பது ஆணவ மலத்தையும், 'லயம்' என்பது அடங்கியிருத்தலையும் குறிக்கும் ஆலயம் என்பதற்கு ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்னும் பொருள் கொள்ளலாம்.

கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள பரம்பொருளை இறை அல்லது இறைவன் கடவுள் இயவுள் தெய்வம் என்னும் திருப்பெயர்களால் போற்றி வழிபடுகின்றோம். இறை அல்லது இறைவன் என்னும் திருப்பெயர் இறுதி என்னும் பகுதியினடியாகப் பிறந்த பெயர்ச்சொல் ஆகும். இறு—இறுத்தல் அல்லது தங்குதல் என்று பொருள்படும் ''ஆலங்கானத்து அஞ்சுவர விறுத்து'' என்பது போன்ற பல இலக்கியத் தொடர்களில் 'இறு' என்றசொல் இறுத்தல் அல்லது தங்குதல் என்ற கருத்தில் வழங்கியிருக்கக் காண்கின்றோம். இறை அல்லது இறைவன் என்னும் திருப்பெயர். உள்ளும் புறமும் யாண்டும் நீக்கமற. நிறைந்து நிலைபெற்றிருப்பது என்னும் பொருளைக் குறிப்பது சிலப்பதிகாரத்துக்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் என்பவர். இறைவன் என்றசொல்லிற்கு 'எப்பொருளிலும் தாங்குகின்றவன்' என்று பொருள் கூறியுள்ளார்.

'கடவுள்' என்னும் திருப்பெயர் மனம், மொழி, மெய் ஆகிய வற்றைக் கடந்து நிற்பது என்னும் பொருள் குறிக்கும். பொறி, உள்ளம், உயிர்ப்பு இவற்றை எல்லாம் கடவுவது கடவுள் என்று சான்றோர் கூறுவர்.

'இயவுள்' என்னும் திருப்பெயர் பொறி; உள்ளம் உயிர்ப்பு ஆகிய வற்றை இயக்குவது என்று பொருள் குறிக்கும். கடவுள், இயவுள் என்னும் திருப்பெயர்களின் விளக்கமாக,

" ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பார் கண்ணுதலாய் காட்டாக்காவே"

என்ற அப்பர் அடிகளாரின் திருப்பாடல் அமைந்து விளங்குகின்றது. தெய்வம் என்னும் திருப்பெயர் யாண்டும், எதிலும் எஞ்ஞான்றும் நீக்கமற உள்ளிருந்து கடவுவதும் செலுத்துவதுமாகிய பரம்பொருள். உண்மை யுணர்வுடையர் தம் உணர்வாலும், கட்புலனாலும் கண்டு கொள்ளுதற்குரிய பொருளைக் குறிக்கும்.

## எங்கும் திருக்கோவில்களே

இந்தியப் பண்பாடே கோயிற் பண்பாடு. இந்தியாவின் பெருமையே கோயிற் பெருமை புனித இந்தியாவை நினைத்தால் புண்ணிய தீர்த்தங்களும், அருட்பெரும் கோவில்களும் முன் நிற்கின்றன மரங்கள் அடர்ந்த காடுகளில் கோவில்கள் உண்டு. நீர் பெருக்கெடுத்தோடும் ஆற்றங்கரைகளில் கோவில் உண்டு. ஓங்கி நிமிர்ந்த மலைகளில் கோவில்கள் உண்டு அலை வீசி ஆர்க்கும் கடற்கரைகளில் கோவில்கள் உண்டு ஆல், அரசு, புன்னை, வன்னி, வில்வம் ஆகிய மரத்தடிகளிலெல்லாம் கோவில்கள் உண்டு. எங்கு நோக்கினும் திருக்கோவில்கள் காணப்படுகின்றன.

உலகமே உயிர்மேனிப் பெருமான் உலாவும் கோயில் " உள்ளம் பெருங்கோயில் ஊனுடல் ஆலயம்" எல்லாவுயிர்க்கும் இறைவன் ஒருவனே! எல்லாவுடலும் இறைவன் ஆலயமே!

இந்தியாவின் வடக்கெல்லையான இமாலயத்தில் கைலாசநாதரும் உமாதேவியும் கோயில் கொண்டிருக்கின்றனர். தெற்கே குமரியன்னை தவம்புரிகிறாள் இமாம நாதரும் கோயில் கொண்டிருக்கிறார். கிழக்கே

காசி விசுவநாதர் காட்சி தருகிறார். மேற்கே சோமநாதர் எழுந்தருளித் திகழ்கின்றார். இதிலிருந்து இந்திய மக்களின் வாழ்க்கையே கோயிலைச் சுற்றி அமைந்துள்ள திறமை நன்கு விளங்கும்.

மனிதனுடைய உடம்பில மூலாதாரத்தினின்று ஆக்கை சக்கரம் வரையில் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன ஒவ்வோர் ஆதாரத்திலும் ஒவ்வொரு விதமாக யோகி ஈசுவரதரிசனம் பெறுகிறான் இந்த ஆறு சக்கரங்களையும் கடந்து உச்சந்தலையில் சகசராரம் என்னும் சக்கரத்துக் குண்டலினின்று சக்தி எழுந்தருளும்போது யோகியானவன் பரம்பொருளோடு லயித்து முத்தியடைந்து விடுகிறான். இத்தத்துவம் பரதகண்ட புண்ணிய பூமியில் இயக்கையாக அமைந்துள்ளது.

தென்கோடியில் கன்னியாகுமரி மூலாதாரமாயிருக்கின்றது. அவ்விடமிருந்து வடமுகமாகச் செல்லும்போது இடைதலை பிங்கலை என்னும் இரண்டு நாடிகளுக்கிடையில் யோக சக்கரங்கள் போன்ற முக்கியமான இடங்களில் சில விஷ்ணு தலங்கள் அருகருகே இருந்து ஒரே கருத்தை விளக்குகின்றன.

இதில் முதலில் வருவது மதுரையம்பதியில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் — இதற்கு அருகில் கண்ணழகர் கோயில் உள்ளது. இதற்கு அடுத்து வருவது திருவரங்கப் பெரியகோயில் அரங்கநாதர் கோயில் இதற்கு அருகில் திருவானைக்கா அகிலாண்டேசுவரி சமேத கோயில் உள்ளது. மூன்றாவதாக வருவது தில்லைவன சிதம்பரம் சிவகாமசுந்தரி சமேத நடராஜர் கோயில் இதையடுத்துக் குமரப் பெருமானின் குன்றுதோறாடல், அதன்பின்னர் தன்னையடைந்தார்க்கு அழிவில்லாத செல்வங்களை வழங்கியருளும் திருவேங்கடம் என்னும் பெயர் கொண்ட திருப்பதி அலமேலு மங்கைத் தாயார்ச் சமேத சீனிவாசகப் பெருமாள். இதற்கு அடுத்தாற்போல் தட்சின கைலாயத்தின் கொடுமுடி ஞானாம்பிகை சமேத காளத்தீசுவரர். இதன்பின்னர் விசாலாட்சி சமேத விசுவநாதர் இருப்பிடமான காசியும், புனிதமான கங்கையை யடுத்து யமுனா நதிக்கரையின் பிருந்தாவனமும், இமயமலையின் தென்சாரலில் உள்ள கேதாரதுவாதசலிங்கத் தலம். கேதாரேசுவரர் அடுத்து அரவிந்தவல்லி சமேத பத்ரி நாராயணன் இருப்பிடமான பத்ரிநாதமும் ஆக கன்னியாகுமரிமுதல் மொத்தம் ஆறு தலங்களும் ஆறு ஆதாரங்கள்போல் விளங்குகின்றன. இந்த ஞானபூமியை விளக்குவது திருக்கையிலைமலை, இஃது ஏழாவது.

மனிதனுடைய தன்மை அவனுடைய முகத்தினின்று விளங்குவது போல் இந்தியாவின் தன்மை அதன் தலையாகிய கயிலையினின்று அறியப்படுகிறது.

வாழ்ங்கைக்கு அன்பும் அறிவும் இன்றியமையாதவை இவை இரண்டும் ஒருங்கே வாய்க்கப் பெறாதவர் வாழ்வு அரைகுறையான வாழ்வாகும், இவை இரண்டும் இறைவனிலிருந்து உதிக்கின்றன என்றும் உயிர் நிலைக்கு வரும்போது இவையிரண்டும் ஒன்றாகி விடுகின்றன என்றும் இமயமலையினின்று உற்பத்தியாகும் கங்கையும்; யமுனையும் உணர்த்துகின்றன இந்தியாவின் நாகரிகம் நதிக்கரையோரங்களில் வளர்ந்ததென்றால், இந்தியாவின் புண்ணிய நதிகளில் பல இறைவனுடைய திருவடிக்கு ஒப்பாகிய இமயமலையிலின்று பாய்கின்றன.

திருக்கோயிற் கருவறையிலிருந்தே நமக்கு அறிவும், அமைதி இன்பமும் வருகின்றன.

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சேக்கிழார் திருமூலர் முதலிய திருத்தொண்டர்களும், ஆழ்வார் பெருமக்களும் திருக்கோயில் தோறும் சென்றும் திவ்விய தேசம்தோறும் சென்றும் பாடிப்பரவினர் பேரருள் பெற்றனர்.

திருக்கோயிலின் தத்துவம் நம்முள் விளங்கும் தூயதத்துவங்களின் புறவிளக்கமாகவே அமைந்துள்ளது உள்ளத்தே உள்ளமாய் உள்ள ஒளிமணியே உருவாகக்காட்டி கல்லாரும் கண்ணாரக் காணச்செய்வது திருக்கோயிலின் அமைப்பு. திருக்கோயில் பத்தியின் வித்தாகி முத்தியின் சித்தாக விளங்குகிறது.

இருபத்தெட்டு ஆகமங்களின் பொருளும் கோயிலுருக்கொண்டு விளங்குகின்றன.

## அண்டமும் பிண்டமும்

"எது இங்குக் காணப்படுகின்றதோ அதே பரலோகத்திலும்" என்று வடமொழி ஸ்மிருதி கூறும்.

உலகவடிவமான அண்டத்திலும் எது காணப்படுகின்றதோ, அதே உடலான பிண்டத்திலும் காணப்படுகின்றது அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய, கோசங்களுக்கு மேலே உள்ளது ஆத்ம சொரூபம் ஐந்து பிரகாரங்களுக்குள்ளே, ஐந்து வாயிற்படிக்குள்ளே, உள்ள திருக்கோயிலில் மூலத்தான இலிங்கம்.

நமது உடலின் கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஐந்து ஞானேந்திரியங்களும்; வாக்கு, கை, கால், சிறுநீர், மலத்துவாரம் என்னும் ஐந்து கர்மேந்திரியங்களும் துவாரங்காக அமைந்துள்ளன. இவ்வாறே திருக்கோயில்களில் கோபுரத்துவாரங்கள் அமைந்துள்ளன, பலதாமரை இதழ்களால் மூடப்பட்ட இருதய குகையே சிவன் இருப்பிடமாகும். அதுபோல் பலதுவாரங்களைக் கடந்து கருவறை சென்றே மூலத்தானத்தைக் காணமுடியும்.

இதயம் எவ்வாறு நுட்பமாக உள்ளதோ அவ்வாறே மூலத்தான மும் மிக சூட்சுமமானது. நமது உடலில் ஒவ்வோர் உறுப்பிலும் தேவதைகள் தங்கியிருக்கின்றனர் நாதவடிவமான சீவனது ஒலி நம துள்ளே கேட்கப்படுவது போலத் திருக்கோயிலில் மணிஒலி கேட்கப் படுகிறது.

# ஆன்மாவும் ஆலயமும்

அணுமுதல் அண்டம் வரையுள்ள அனைத்துமே உயிர்உள்ளவை என்பது இந்துமதக் கோள்கை.

இந்துமதத்தவர் உலோகங்களில் உயிர் உறங்குகின்றது என்றும், தாவரங்களில் கனவுகாண்கின்றது என்றும் விலங்குகளில் நனவு காண் கின்றதென்றும், மக்கள் தேவரிடத்தில் விழிப்புடன் பகுத்தறிவும், உடையது என்றும் முத்தி ஆன்மாக்களிடத்தும் இறைவனிடத்தும் சத், சித் ஆனந்தமாக இடைவிடாது விளங்குகின்றது, என்றும் கூறு வார்கள் இந்த உண்மையை விஞ்ஞானவியலார் தம்ஆய்வின் மூலம் படிப்படியே உணர்ந்து நம்பி வருகின்றனர்.

நம்நாட்டுப் பழங்காலப் பெரியோர்கள், தமது யோகப்பயிற்சி யால் திறக்கப்பட்ட நெற்றிக்கண்பார்வையால் பல உண்மைகளையும், தத்துவங்களையும் அறிந்து வழி, வழி மக்கள் உணர்ந்து உய் யும் பொருட்டு அண்டத்திலுள்ள வேறுபாடுகளையும், பிண்டத்திலுள்ள வேறுபாடுகளையும் உண்மைகளையும் தத்துவங்களையும் ஆலய அமைப்பில் ஆக்கி வைத்தருளினர்.

ஆலய அமைப்பின் ஆலயத்தின் முதன்மையான நோக்கம் ஆன்ம தத்துவத்தை உணர்த்துவதேயாகும் ஒருவனை நோக்கி நீ யார்? என்று வினவினால் அவன் ''நான் பொன்னன், செல்வன், கண்ணன்'' என்றுவிடை கூறுவான். வினவினவனும் மன அமைதி கொள்வான் ஆனால் அவர்கட்கு அருகில் நின்ற அறிவாளன் 'ஐயா இவையெல்லாம் உம் உடம்பின் அறிகுறிகள் அல்லவா?, நீர் இந்த உடம்பை ஆட்கொண் டிருக்கும் ஆன்மா அல்லவா! என்று அறிவுறுத்துவான்.

இந்நிலையே உண்மை நம்மில் பலர் நமது உடம்பையே நாமா கக் கருதுகின்றோம். நாம் 'ஆன்மா' என்ற உணர்வு நமக்கு எளிதிற் புலனாவதின்று மனிதனுக்கும் மனித உடம்பிற்கும் உள்ள வேறு பாட்டை நம்மில் பலர் உணர்வதில்லை. இந்த மயக்கத்தை நீக்கி மனிதன்; உடம்பல்ல, குணங்களல்ல அறிவுமல்ல அறிவிற்கெல்லாம் அப்பாற்பட்ட ஆன்மாவே அவன் என்ற உண்மையை உலகிற்கு உணர்த் துவதே ஆலயம்.

அந்த ஆன்மா ஆறுவிதமான பேதங்களைக் கொள்கின்றது. ஆன்மாவின் பேதங்களையும் வேறுபட்ட நிலைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் 'சர்வஞானோத்ரம்' என்ற ஆகமம்.

''பூதபரிணாமத்தால் பூதான்மா ஆவான்
புகல் சத்தம் பொருந்தலின் அந்தரான்மா ஆவான்
மேதகுதத் துவத்தால் தத்துவாத்மா ஆவான்
விளம்புபிர கிருதிகுணற் றழிஇச்சு துக்கங்கள தீதறவே புசித்தலினால்
சிவான்மா ஆவான்
திகழ்தருமந் திரப்புணர்வார் மந்திரான்மா ஆவான்
யாதுமறவிட்ட அவன் பரமான்மா ஆவான்
எகான்மாவே ஆறுதிறனு மாயிருப்பன்''

என்று கூறுகின்றது.

தன் இச்சைகளையும் விருப்பு வெறுப்புகளையும் தானாக ஒருவன் கொள்ளும்போது அவன் அந்தரான்மா எனப்படுவான்.

பிருதிவி முதல் புருடத்துவம் வரையுள்ள ஆன்ம தத்துவங்களை அறியும் கருவியாகிய மனத்தையே தானாக ஒருவன் உணரும்போது அவன் தத்துவான்மா எனப்படுவான்.

மேற்கூறியவை அனைத்தையும் நான் அடக்கியாள்பவன் என்று உணர்வு பிறந்தது. அதனால் நான் பிரம்மம் என்ற ஆணவமுனைப்பு உண்டாகும்போது, அவன் சிவான்மா எனப்படுவான்.

''யான், எனது'' என்ற பசு நிலையை நீக்கவும், பேரின்ப வீட்டைப் பெறவும் விரும்பி மந்திர உபாசனையில் ஒன்றிநிற்கும்போது அவன் மந்திரான்மா எனப்படுவான்.

இறைவனோடு உடனாய் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையில் அவன் யாதும் அறவிட்ட பரமான்மா எனப்படுவான். எனவே ஒரே ஆன்மாவே அதன் அறிவு நிலையைப் பொறுத்தும், அது சார்ந்து நிற்கும் பொருளைப் பொறுத்தும் பூதரான்மா, அந்தரான்மா, தத்துவான்மா, சிவான்மா, மந்திரான்மா, பரமான்மா என்ற ஆறுவிதமான வேறுபாடுகளை உடையதாக விளங்கும் என்பது ஆகமக்கருத்து.

ஆன்மாவின் இந்த ஆறு நிலைகளையும் உணர்த்தும் அறிகுறிகளாக இறைவன் திருக்கோயில் அமைந்து விளங்குகின்றது.

1. முன்கோபுரம் — தூலலிங்கம் ⟶ பூதான்மா
2. மகாபலிபீடம் — பத்திரலிங்கம் ⟶ அந்தரான்மா
3. கொடிமரம் — துவஜலிங்கம் ⟶ தத்துவான்மா

| | | | | |
|---|---|---|---|---|
| 4. மூலவர் | — | சதாசிவலிங்கம் | —→ | சிவான்மா |
| 5. ஆசாரியார் | — | ஆன்மலிங்கம் | —→ | மந்திரான்மா |
| 6. பரவெளி | — | அகண்டலிங்கம் | —→ | பரமான்மா |

திருக்கோயிலில் உள்ள முன்கோபுரம், பலிபீடம், கொடிமரம், மூலவர், ஆசாரியார், பரவெளி என்னும் ஆறும் ஆறுபேதங்களாக உள்ள ஆன்மாவின் நிலைகளை முறையே உணர்த்தி விளங்குகின்றன.

# ஆலயத்தின் உயிர்நிலை

திருக்கோயிலின் உயிர்நிலையாக அமைந்து விளங்குவது, மூலத்தானம் என்று வளங்கப்படுகின்ற கருவறையில் திருக்காட்சி அருளும் திருவுருவமே. திருக்கோயிலுக்கு நாம் செல்லுங்கால், வெகுதொலைவில் வரும்போதே நமக்கு முதன்முதலாகத் திருக்காட்சி தருவது வானளாவிய திருக்கோபுரமே. கருவறைத் திருவுருவத்திற்கு அடுத்ததாக முக்கியத்துவம் பெற்று விளங்குவது திருக்கோபுரம்.

திருக்கோபுரத்தின் முன்னின்று கோபுரத்தை வழிபடுகின்றோம். அதன்பின்னர் கோயிலுட் சென்று கருவறையில் எழுந்தருளிய சிவலிங்க மூர்த்தியைக் கண்டு வழிபடுகின்றோம். கோபுரத்தையும், இறைவனின் திருவுருவத்தையும் கண்டு வழிபடுகின்ற நாம், மதிற் சுவர்களில் உள்ள அழகிய சிற்பங்களையோ மண்டபத் தூண்களில் பொலிவுறும் சிலைகளையோ கண்டு வழிபடுவதில்லை.

இதன் காரணம் என்ன?

கருவறையுள் திருக்காட்சியருளும் மூலவர் திருவுருவம் யந்திரப் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது சாதாரணமாக உலக வழக்கில் எந்திரம் என்பது எஞ்சின் என்று சொல்லப்படும். எஞ்சின் இல்லாத வண்டி ஓடுவதின்று எந்திரப்பிரதிட்டை செய்யப்பெறா திருவுருவம் அருள்புரிவதின்று, சிறப்புறுவதின்று கருவறைத் திருவுருவைக் கருணைத் திருமேனியாக்கித் திருவருள் புரியும் தன்மையராக்குவதும், திருவருளைப் பெருக்கெடுத்து வெளிப்படச்செய்வதும் அத்திருவுருவின் அடியில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ள எந்திரமேயாகும்

எந்திரப் பிரதிட்டை இல்லாத கோயில் அருளாலயமாக, ஆகம ஆராதனைக் கோயிலாக விளங்குவதின்று.

திருக்கோபுரத்திற்குக் குடமுழுக்கு கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

மூலவர் எந்திரப் பிரதிட்டை உடையவரானதாலும், கோபுரம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளதாலும் வழிபடுகின்றோம். கோயிலிலுள்ள மற்ற சிற்பங்கள் சிலைகட்கு இத்தகைய சிறப்பு எதுவும் செய்யப் பெறாமையால் அவை என்றும் கற்சிலைகளாகவே காணப் படுகின்றன. கற்சிலைகளாக உள்ள காரணத்தினால் நாம் அவற்றைக் கரங்குவித்து வழிபடுவதில்லை.

கோயிலின் உயிர்நிலையாக உள்ள கருவறைத் திவுருவம், இறைவனின் அருள் வடிவாகவும் கோபுரம் இறைவனின் அருட்சின்னமாகவும் விளங்குகின்றன.

# மூவகை முறைகள்

இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயில்கள் மனிதனுடைய ஆன்மாவிற்கு தேவையான உணர்வை அளிப்பதற்காக எழுந்தவையாகும் எனவே மனிதனுடைய அறிவு, இச்சை, செயல் ஆகிய மூன்றுக்கும் உணர்வளிக்கும் படியாக மூவகை முறைகள் அமைந்துள்ளன. அவை கோயில் அமைப்புமுறை, ஆராதனை முறை, தரிசன முறை என்பவை யாகும்.

கோயில் அமைப்பு முறை என்பது கோயில் கட்டடங்கள், மண்டபங்கள், பிரகாரங்கள் முதலிய அதன் உறுப்புக்கள், அங்குள்ள திருவுருவங்கள் அவற்றிற்கேற்பட்ட இடங்கள், யந்திரங்கள், பிரதிட்டைகள் முதலியவை அமைக்கப்பட்டிருக்கும் முறையாகும்.

ஆராதனை முறை என்பது, அர்ச்சகர் பட்டர், குருக்கள்பூசாரி முதலியோர அக்கோயிலில் பூசை இயற்றும் முறையாகும். ஆராதனை முறைஎன்பது அடியார்கள் அக்கோயிலில் சென்று வழிபடும் முறையாகும்.

இம் மூன்று முறைகளும் முறையே மூவகைப் பொருள்களாக அமைந்துள்ளன. அவை அறிகுறிப் பொருள் அருள்நெறிப் பொருள் அனுபவப்பொருள் என்பவையாகும் அறிகுறிப்பொருள் என்பது அடியாருடைய அறிவைப் பெருக்குவது. அருள்நெறிப்பொருள் என்பது அடியாருடைய இச்சையைப் பண்படுத்துவது. அனுபவப் பொருள் என்பது, அடியார்க்கு மன அமைதியையும் ஆன்ம முன்னேற்றத்தையும் அளிப்பது.

## கோபுரத் தத்துவம் (உண்மை)

திருக்கோயிலிலுள்ள திருக்கோபுரம், மனிதனுடைய மயக்கத்தை நீக்கியருள வல்லதாய் விளங்குகின்றது. மக்கள் தம் உடம்பையே தாமாகக் கொண்டு தங்களுடைய ஒழுக்கத்தையும் உலகச் சூழல்களையும்

விவகாரங்களையும் வகுத்துக் கொள்கின்றனர். அதனால் போட்டிகளும் பிணக்குகளும் ஏற்படுகின்றன. தம் உடம்பையே தாமாகக் கொள்வது மயக்கம் அந்த மயக்கத்தை நீக்கி "மனிதன் உடம்பல்ல ஆன்மா" என்ற உண்மையை இடைவிடாது உணர்த்தி நிற்பது கோபுரம். எனவே திருக்கோயிலுக்கு வழிபடச் செல்லும் அன்பர்கள் ஒவ்வொருவரும் திருக்கோபுரத்தைக் கண்டவுடன் 'நான் இந்த உடம்பல்ல; உள்ளிருக்கும் ஆன்மா" என்ற உண்மையை உள்ளத்திற்கு அறிவுறுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

உடம்பையே தானாகக் கொள்வது நெடுநாளைய பழக்கம். எனவே அதனை அவ்வளவு எளிதில் விரைவில் தவிர்த்தல் இயலாது. அதனைத் தவிர்க்க திருக்கோபுரம் உணர்த்தும். 'நான் ஆன்மா' என்னும் உண்மையை அடிக்கடி நினைவில் கொண்டு வருதல் வேண்டும். அப்போதுதான் 'நான் ஆன்மா' என்ற உண்மை நிலை கொள்ளும். பிறரையும் காணும்போது அவர்களையும் உடம்பாகக் கருதாமல் ஆன்மாவைக் காணும் தன்மையும் உண்டாகும்.

# இராஜ கோபுரம்

திருக்கோயிலின் உள்ளிருக்கும் கோபுரங்கள் எல்லாவற்றையும்விட இராஜகோபுரம் உயர்ந்ததாக இருக்கும். இந்தக் கோபுரத்தைத்தான் தூலலிங்கம் என்று கூறுவார்கள். தூரத்தில் உள்ளவர்களுக்கு நினைவூட்டவே இஃது அமைந்திருக்கிறது. நெடுந் தொலைவிலே காணப்படும் இக்கோபுரத்தைக் கண்டு எவன் வணங்குகின்றானோ அவன் சட்டை நீக்கிய அரவம்போல் பாவத்திலிருந்து நீங்குகின்றான்'

இராஜ கோபுரத்தின் அமைப்பினைக் கவனித்தால், அதில் அநேக வடிவங்கள் காணப்படும் மானிட வடிவங்கள், தேவர்கள் வடிவங்கள், சில அருவருக்கத்தக்க வடிவங்கள், சில வனவிலங்குகள், பறவைகள் மற்றும் ஏனைய சிற்றுயிர்கள் முதலியவை இருக்கக் காண்கின்றோம். இவையெல்லாம் அலங்கார வடிவங்களாகக் கருதக்கூடாது இவ் வடிவங்கள் ஆகம விதிப்படியும், இயற்கை நடைமுறையின் புறச் சின்னமாகவும் உள்ளன உலக உற்பத்தியில் இவை எல்லாவற்றிற்கும் இடமுண்டு என்பது இதன் கோட்பாடு சிற்றுயிர்கள், பேருயிர்கள் விலங்கினம் மக்களினம், தேவர் கூட்டம் ஆகியவர்கள் எல்லோரும் உலகில் இருக்கின்றார்கள்.

அண்டத்தினுள் இன்னது இருக்கின்றது. இன்னது இல்லை என்று பாகுபடுத்த முடியாது என்னும் கோட்பாட்டை இராஜகோபுரம் விளக்குகின்றது

இராஜகோபுரத்தின் வாயில்கள் ஒற்றைப்படை எண்ணில்தான் அமைந்திருக்கும் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பதுபதினொன்று க அமைந்திருக்கும் இவ்வாயில்களை நிலைகள் என்றும் சொல்லுவார்கள்.

இராஜ கோபுரத்திலுள்ள மூன்று வாயில்கள், ஜாக்கிரத, சொப்பன சுஷிப்தி என்னும் அவத்தைகளைக் குறிக்கின்றன. இராஜ கோபுரத்தின் ஐந்து வாயில்கள் ஐம்பொறிகளைக் குறிக்கின்றன.

இராஜ கோபுரத்தின் ஏழு வாயில்கள் ஐம்பொறிகளோடு மனம் புத்தி என்னும் இரண்டும் சேர்ந்து ஏழினையும் குறிப்பவை.

இராஜ கோபுரத்தின் ஒன்பது வாயில்கள் அந்த ஏழினோடு சித்தம் அகங்காரம் என்னும் இரண்டும் சேர்ந்த ஒன்பதையும் குறிப்பவை.

சிவாகம வாக்கியத்தின்படி இறைவன் கோபுரத்திலும், விமானத்திலும், வாயிற்படியிலும், மண்டபங்களிலும், பலிபீடத்திலும், மூலலிங்கத்திலும் எப்போதும் வெளிப்பட்டிருக்கின்றார் என்பதால் தூலலிங்கமான கோபுரத்தை வணங்கியே உட்சென்று இறைவனை வழிபடுதல் வேண்டும் என்பது விதி.

தூலலிங்கமான கோபுரத்திற்குள் காலை வைத்தவுடன் சிலகணங்கள் நம்மிடம் வந்து சூழ்ந்து கொள்கின்றனர். ஆகையால் அவை திரும்பிச் சென்று கோபுர வாயிற்படியில் உட்காரும் வரையில் கண்டிப்பாகச் சில நியமங்களைக் கைக்கொள்ளுதல் வேண்டும். சிவனுக்கு விரைவில் கோபமும் உண்டாகும், மகிழ்ச்சியும் உண்டாகும் ஆகையால் செய்யக்கூடாத குற்றங்களையெல்லாம் தவிர்த்து, தூய்மையுடன் தரிசனம் செய்து திரும்புதல் வேண்டும்.

## பலிபீடத் தத்துவம் (உண்மை)

திருக்கோயிலில் முன்கோபுரம் எளிதில் புலப்படுவது போலவே மனிதனுக்கு எளிதிற் புலப்படுவது தூல உடம்பு. கோபுர வீதியில் நிகழ்கின்ற தேர்த்திருவிழா முதலிய ஆர்ப்பாட்டங்கள் தூல உடம்பை ஒட்டி நிகழுகின்ற சிற்றின்ப அனுபவங்கள். தூல உடம்பைத் தானாக எண்ணும் ஆன்மா 'தூலான்மா' 'தேகான்மா' 'பூதான்மா' என்றெல்லாம் சொல்லப்படும். தூலான்ம நிலையை முன்கோபுரம் உணர்த்துவது போலவே, அந்தரான்ம நிலையை உணர்த்துவது மகாபலிபீடம்.

முன்கோபுரத்தை வழிபட்டு உடம்பைத் தானாகக் கொள்ளாது தான் ஆன்மா என்ற உண்மையை உணர்ந்த நிலையில் கோபுர வாயிலைக் கடந்து உள்ளே செல்லுகின்ற மனிதன் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் உணர்வினனாவான். எனவே அவன் இச்சைகளால் காமக் குரோத லோப மோக மத மாச்சரியங்களாகிய மிருக இச்சைகளால் என்றும் துன்பமேயன்றி, இன்பமின்று என்பதை உணர்ந்து பலிபீடத்தை நெருங்கியதும் இச்சைகளாகிய மிருகங்களைப் பலிகொடுக்கும் பொருட்டுக் கீழே விழுந்து வணங்குகின்றான். இச்சைகளைப் பலிகொடுத்து எழுந்த அவன் அந்தரான்ம நிலையினன். இந்த அந்தரான்ம நிலையை உணர்த்துவது மகாபலிபீடம்.

# கொடிமரத் தத்துவம் ( உண்மை )

மகா பலி பீடத்தின் முன் தன் இச்சைகளைப்பலி கொடுத்து, தான் உடம்புமன்று, தான் இச்சைகளுமல்ல என்ற உண்மை உணர்ந்து, பலி பீடத்தை அடுத்து உள்ள கொடிமரத்தைக் காண்கின்றான். அஃது அந்த அந்தரான்ம நிலையினனுக்குத் தத்துவான்ம நிலையை உணர்த்தும் சின்னமாக உள்ளது.

பூதான்மா, அந்தரான்மா, தத்துவான்மா ஆகிய மூன்று ஆன்மாக் களும் கொடிமரத்தின் உச்சியில் அடுத்தடுத்து அமைந்துள்ள மூன்று நிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மூன்று நிலைகளும் மூன்று ஆன்ம நிலைகளை உணர்த்துவனவாகும். இம்மூன்று ஆன்மாக்களில் பூதான்மா பெரிதும் விரும்புவது உண்ணல், உடுத்தல், குடித்தல் முதலிய ஐம்புல நுகர்ச்சிகளும் பெண்ணாசையுமாகும். இவற்றின் பொருட்டு மண், பொன், புகழ் ஆகியவற்றையும் இழக்கத் துணிவர்.

அந்தரான்ம நிலையிலுள்ளோர் மண், பெண், பொன் மூன்றையும் விரும்புவர். ஆனால் மிகவும் விரும்புவது சுகவாழ்க்கையையும் அதற்குத் துணை புரியும் பொன்னையுமாகும். பிறர் மனைவியையும், மண்ணை யும் விரும்புபவர். ஆனால் அவற்றால் துன்பம் வருமெனில், அவ் விருப்பத்தைச் செயல் படுத்தாது அடக்கிக் கொள்வர். சமுதாயம், நன்மை, தீமை என்று வகுத்தவற்றை இயன்றவரை பின்பற்றுவர்.

தத்துவான்ம நிலையிலுள்ளோர் மிகவும், விரும்புவன புகழும் போற்றுதலுமாகும். புகழுக்காக அறிவைப் பெருக்குவர். தானதருமங் களில் ஈடுபடுவர். உலகம் பழித்ததை ஒழிப்பர். புகழுக்காகப் பொன்னையும், மண்ணையும் இழக்க முன்வருவர். பெண், பொன் ஆசைகளைக் கைவிடுவர். கொடி மரத்தால் கைவரப் பெறுவது இத் தத்துவான்ம நிலை.

கொடிமரம் என்பதை வடமொழியாளர் துவஜஸ்தம்பம் என்று கூறுவார்கள். துவஜம் என்பதற்குத் தருமம் என்று ஆகமங்கள் பொருள் கூறும் உடம்பில் வீணாதண்டம்போல் மூலாதாரம் முதல் பிரம்ம மந்திரம் வரையில் மேனோக்கிச் செல்லும் பரமநாடியாகக் கொடி மரத்தைக் கூறுவர்.

கொடிமரம்போல் உடல் நேராக இருந்து விளங்கும். இடைகலை பிங்கலை என்னும் இரண்டும் நாடிகளின் வழியே சென்று திரும்பும் பிராண வாயுவை நடு நாடியில் நிறுத்த, சிறிதும் அசையாமல் தியானிக் கின்ற பிராணவாயு நிற்கும். அதுநிற்க மனமும் நிற்கும். மனம் நிற்க ஐம்பொறிகளும் அடங்கும். அவையடங்க உலகப் பற்றுக்களெல்லாம் ஒழியும். எனவேதான் கொடிமரம் திருக்கோயில்களில் மூலத்தானத்திற்கு நேராக நிறுத்தப்பட்டுள்ளது.

யாகத்தில் யூபதம்பம் போல் திருக்கோயிலில் ஆகமவிதிப்படி ஒரு கொடிமரம் அமைக்கப்பட்டிருப்பது: டஞ்சலிங்கங்களில் இரண்டாவதாகும், இதனருகே பலிபீடம் என்னும் பத்திரலிங்கமும் நந்தியும் அமைக்கப்பட்டிருக்கும்.

இக்கொடிமரம் வெய்யில் மழையிலடிபட்டு அசைவற்று எவ்வகையான மாறுதலுமின்றித் தூண்போல் நிற்கின்றது. இது முக்கோண வடிவமான மாயா காரியத்தில் ஈடுபடாமல் கூட தூப ரூபமாயிருக்கும். பரமாத்ம சொருபத்தை விளங்குவதாகும். இதன் அருகே பலிபீடம் என்பது, பரிவார தேவதைகளுக்குப் பலி (பூசை) போடுமிடம் இங்கு தான் நாம் தண்டம் போல் விழுந்து வணங்க வேண்டும். இங்கு நான் என்ற அகந்தையைப் பலிகொடுத்து, தன்னை மறந்து, தியானம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும்போது வீடு, மனைவி, மக்கள் நினைவையும் விடுதல் வேண்டும்.

1. கொடி மரத்தைக் கடந்து உள்ளே சென்றபின் எந்த இடத்திலும் விழுந்து வணங்குதல் கூடாது.

2. உடையினால் உடம்பை மூடிக்கொண்டு திருக்கோயிலில் வலம் வருதல், வணங்குதல் செய்பவர் மூன்று பிறவிகளில் தரித்திரனாவான.

3. எவர் திருக்கோயிலில் கொடிமரம் வைக்கின்றாரோ அவர் அந்தப் புண்ணியத்தால் அரனாவர்.

## வணங்குதல் வகையும் முறையும்

வணங்குதல் என்பது பணிதலாகும். இதனை வடமொழியில் நமஸ்காரம் என்று சொல்லுவார்கள். நான் என்னும் அகந்தை உள்ளவன் எவருக்கும் பணியமாட்டான். நாம் உலகில் எவ்வளவு செல்வம், மேதை அதிகாரம் பெற்றிருந்தாலும் இறைவனெதிரில் அவை ஒரு பொருட்டல்ல இறைவன் அருளன்றி நம்மால் ஒன்றையும் செய்ய முடியாது கை, கால்களை அசைக்கவும் முடியாது என்பதை நனகு உணர வேண்டும்

பணிதலை இருவகைப்படுத்துவர். அவை அட்டாங்கப்பணிவு, பஞ்சாங்கப்பணிவு என்பவையாகும். கொடிமரத்தின் முன் வணங்குகின்றவர்களில் ஆடவர் அட்டாங்கப்பணிவு முறையையும் பெண்டிர் பஞ்சாங்கப்பணிவு முறையையும் கொள்ளுதல் வேண்டும்.

## அட்டாங்கப் பணிவு

அட்டாங்கம் என்பது எட்டு அங்கங்களைக் குறிக்கும். உடம்பிலுள்ள எட்டு அங்கங்கள் தரையில் படுமாறு பணிந்து வணங்குதல் வேண்டும். அவ்வங்கங்களாவன:- தலை, இரண்டு செவிகள், இரண்டு கைகள், இரண்டு கால்கள், முகவாய்க்கட்டை என்பவையாகும். ஆண்கள் இவ்வாறு பணிந்து வணங்குதல் வேண்டும்.

## பஞ்சாங்கப் பணிவு

பஞ்சாங்கம் என்பது ஐந்து அங்கங்களையுங் குறிக்கும். அவை யாவன, தலை, இருகைகள், இருமுழங்கால்கள் என்பனவயாகும். இவ் ஐந்து அங்கங்களும் நிலத்தில் நன்கு படுமாறு பெண்கள் பணிந்து வணங்குதல் வேண்டும்.

கொடிமரத்தின் முன் பணிந்து வணங்குவோர் மூன்று முறையோ, ஐந்து முறையோ, எழு முறையோ, ஒன்பது முறையோ, பன்னிரண்டு முறையோ பணிந்து வணங்குதல் வேண்டும். ஒருமுறை இருமுறை பணிந்து வணங்குதல் குற்றமாகும்.

அவ்வாறு பணிந்து வணங்கும்போது வடக்கேயோ அல்லது தெற்கேயோ கால் நீட்டல் வேண்டும். கிழக்கேயோ மேற்கேயோ கால் நீட்டுதல் கூடாது. பிற்பகலிலே சூரிய கிரகணமாயினும், சந்திரகிரகண மாயினும் அன்று வழிபாடு செய்வோர் மேற்கே கால் நீட்டுதல் கூடாது. தெற்கு வடக்கு நோக்கிய திருச்சந்நிதிகளில் அட்டாங்க, பஞ்சாங்கப் பணிவு முறையில் வணங்காது கரங்குவித்து வணங்குதல் வேண்டும். தலைமீது இரு கரங்குவித்து வணங்குதல் வேண்டும்.

தரையில் விழுந்து வணங்கும்போது உடம்பில் எவ்வளவு தூசி படிகின்ற அவ்வளவு வருடகாலம் நாம் கைலையில் வாழ்வோம் என்று வேதம் கூறுகின்றது.

## அதிகார நந்தித் தத்துவம் ( உண்மை )

திருக்கோயிலில் சிவலிங்கம், அதிகாரநந்தி, கொடிமரம், பலிபீடம் ஆகியவை ஒரேவரிசையில் இருக்கக் காணலாம். அதிகாரநந்தி சிவ சந்நிதியை நோக்கியவாறு அமைந்திருக்கும்.

நந்தி சிவபெருமானுக்கு உரிய வாகனம். மகாவிஷ்ணுவுக்குக் கருடன் வாகனம், அம்மாளுக்கு சிங்கம் வாகனம். வாகனம் எதுவாயினும் அது சீவான்மாவைக் குறிக்கின்றது. மூலப்பொருளாகிய கடவுளைப் பார்த்த வண்ணமாக வாகனம் அமைந்திருக்கின்றது. கடவுளைச் சென்றடைய வேண்டியது சீவான்மாவின் குறிக்கோள். மனம் எப்போதும் கடவுள் நாட்டத்திலேயே இருக்கவேண்டும் என்னும் கோட்பாட்டை வாகனம் விளக்கிக்கொண்டிருக்கின்றது. அன்பர்கள் வலம் வரும்போது வாகனத்தையும் சேர்த்துத்தான் வலம் வருதல் வேண்டும். குறுக்கே நுழைந்து செல்வது முறையன்று.

திருக்கோயிலில் ஒரேவரிசையில் உள்ள சிவலிங்கம் அதிகார நந்தி கொடிமரம் ஆகிய மூன்றையும் பதி, பசு, பாசம் என்று சைவநூல்கள் கூறுகின்றன.

நந்தி - பசு - ஆன்மா, நந்தி, உலகமாகிய கொடிமரத்தை நோக்காமல் சிவலிங்கத்தை நோக்கி விளங்குகின்றது. கொடிமரத்தை நோக்கினால் வேற்றுமைகளும், சிற்றின்ப அனுபவங்களும் அவை காரணமாகத் துன்பங்களுமே ஆன்மாவுக்குப் புலப்படும் கொடிமரத்தை நோக்காமல் பதியாகிய சிவலிங்கத்தை நோக்குவதால், அண்டத்திற்கு அடிப்படையாகிய ஒற்றுமையும் பேரின்ப அனுபவமும் ஆன்மாவிற்குக் கைவரப்பெறும் எனும் தத்துவ உணர்த்தப்படுகின்றது.

ஆன்மா உலக இச்சைகட்கு இலக்காகித் துன்புறாது இறைவன் திருவருளிற்குப் பாத்திரமாகி இன்புறுதல் வேண்டும் எனும் உண்மையை சிவலிங்கத்தை நோக்கியுள்ள நந்தி உணர்த்துகிறது.

இந் நந்தியின் உத்தரவு பெற்றே கருவறையில் எழுந்கருளியுள்ள பதியாகிய சிவலிங்கப் பெருமானைத் தரிசனம் செய்தல் வேண்டும்.

தற்காலத்தில் சிற் சில அதிகாரிகளைக் காணவேண்டுமாயின் அவ்வதிகாரியிடம், சீர் உடுப்புடன் வாயிலில் இருப்பவரிடம் உத்தரவு பெற்றுச் செல்லுவதுபோல், திருக்கோயிலிலும் நந்தியிடம் உத்தரவு பெற்றே தரிசனம் செய்யவேண்டும் என்று நியதி உள்ளது.

## நந்தி வரலாறு (கதை)

நைமி சாரணியத்தில் 'சிலாதர்' என்ற முனிவர் ஒருவர் இருந்தார் அவர் புத்திரப்பேறு பெறவேண்டி ஈசுவரனை நாடி ஆயிரம் ஆண்டு தவம் புரிந்தார். அவருடைய தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் தோன்றி 'யாது வரம்வேண்டும்' ? என்று கேட்க அதற்கு அம்முனிவர் உம்மைப் போன்ற உருவும் பிறப்பு இறப்பற்ற புத்திரன் வேண்டும்' என்று வேண்டினார். சிவபெருமானும் அவ்வாறே வரமளித்து மறைந்தருளினார்.

அதன் பின்னர் அம்முனிவர் நிலத்தை உழும்பொழுது ஒரு குழந்தை பூமியிலிருந்து தோன்ற, அதற்கு அவர், '' நந்தி '' எனனும பெயர் இட்டார். விதிப்படி அதற்கு உபநயனம் செய்து வேதங் கற்பித்தார்.

நந்தி கோடிமுறை உருத்திர செபம் செய்தார். சிவன் தோன்றி யாது வரம் வேண்டும் என்று கேட்க மற்றொரு கோடி உருத்திர செபம் செய்ய ஆயுளை வேண்டினார், இவ்வாறு மூன்றுகோடி செபம் முடிந்து நான்காவதுகோடி ஆரம்பிக்கும்போது சிவன் அவருக்கு சாருப்பிய முத்தியளித்து மருத்துக்களின் மகளான சுயம்பிரபையை மணம் செய்வித்து சர்வாதிகாரி குணமாகச் செய்தார் என்று புராண வரலாறு கூறுகின்றது.

'' சிவத்தியானம் செய்யும் மகாவித்துவானான நந்தியே! மகாதேவனைத் தரிசிக்க எனக்கு அனுமதி கொடு'' என்று கூறி உள்ளே செல்லும் போது இருகரங்களையு மார்புக்கு நேராகக் குவித்து அஞ்சலி செய்து கொண்டே வலம் வருதல் வேண்டும.

# பிரகாரத் தத்துவம்

திருக் கோயிலில் இராஜ கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் பிரகாரங்கள் உள்ளன. பொதுவாகக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பிரகார மதிற் சுவர்கள் மறைத்துக் கொண்டுள்ளன. எல்லாத் திசைகளிலிருந்தும் இறைவனைக் காண முடிவதில்லை. பிரதான வாயில் என்று சொல்லப்படுகின்ற கிழக்கு வாயில் வழியாகவே சென்று கண்டு வழிபட முடிகின்றது. இறைவனை மறைத்துக் கொண்டிருக்கும் பிரகார மதிற் சுவர்கள் மனிதன் தனிடத்தில் உள்ள ஆன்மாவை, தான் ஆன்மா என்ற உண்மையை எளிதில் அறிய முடியாத வகையில் அமைந்துள்ள உடம்பை உணர்த்துகின்றன. மதிற் சுவர்கள் இல்லையென்றால் இறைவனை எங்கிருந்தும் எப்பொழுதும் கண்டு வழிபடலாம். உடம்பு இல்லையென்றால் மனிதன் தான் "உடம்பல்ல, ஆன்மா தான" என்ற உண்மையை எப்பொழுதும் சிந்தையில் கொண்டிருப்பான. பிரகாரத்தின் மதிற் சுவர்களின அமைப்பு மறைப்பு ஆகியவை உடம்பின் அமைப்பு மறைப்பு ஆகியவற்றை உணர்த்துகின்றன.

பிரதான வாயில் என்று சொல்லப்படுகின்ற கிழக்கு வாயில் வழியாகவே இறைவனைக் காணமுடிகின்றது. இறைவழிபாட்டின் வாயிலாகவே, "தான் ஆன்மா" என்பதை மனிதன் அறிய முடிகின்றது.

பிரகாரத்து மதிற் சுவர்களின் மறைப்பு இறைவனுடைய ஐந் தொழில்கள் முறையில் மறைத்தல் என்னும் தொழில்முறையில் உள்ளது இந்த மறைப்பால் உணர்த்தப்படுகின்ற உடம்பு ஆன்மாவை மறைப்பதால் தான் சான்றோர்கள் தமது உடல்பற்றி இறைவனிடம் முறையிட்டுள்ளனர்.

திருக்கோயில்களுள் ஐந்து பிரகாரங்கள் உள்ள கோயில்களும், மூன்று பிரகாரங்கள் உள்ள கோயில்களும் ஒரு பிரகாரம் உள்ள கோயில்களும் உண்டு.

திருக்கோயிலில் உள்ள ஐந்து பிரகாரங்கள் அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்னும் ஐந்துவித கோசங்களையும் குறிக்கின்றன.

திருக்கோயிலில் உள்ள மூன்று பிரகாரங்கள் ஐந்து கோசங்களான தூலம் சூட்சமம் காரணம் என்னும் மூவகை உடம்புகளைக் குறிக்கின்றன.

கோயிலில் வழிபடுவோர் மூன்று அல்லது ஐந்துமுறை பிரகாரங்களைச் சுற்றவேண்டும் என்பது மூவகை உடம்புகளையும், ஐந்துவித கோசங்களையும் கடந்து இறைவன் விளங்குகின்றான் என்பதை நினைப்பதற்காகும்.

இந்த ஐந்து பிரகாரங்களையும் கடந்தால் இறைவனது சாமீப்ய நிலையை அடையலாம் என்னும் உண்மையை உணர்தல் வேண்டும்.

திருக்கோயிலில் உள்ள ஒரே பிரகாரம் பொதுவான உடம்பைக் குறிப்பதாகும்.

பிரகாரத்தில் வலமாக வரும் போது கருவறையைச் சுற்றிலும் அர்த்த மண்டபம், மகாமண்டபம் அபிடேகமண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் ஆகியவை உள்ளன. கருவறைஉடம்பில் உள்ள மூலாதாரத்தைக் குறிக்கும். பிறமண்டபங்களெல்லாம் சுவாதிட்டானம் மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவற்றைக் குறிக்கும்.

## வலம் வருவதில் உள்ள உண்மை

திருக்கோயிலில் உள்ள பிரகாரங்களில் வலம் வருவதற்கென்று நியதிகளும் வலம் வருவதால் உண்டாகும் பலன்களும் உள்ளன.

| | |
|---|---|
| காலையில் வலம் வருதல் | — நோய் நீங்கும் |
| பகலில் வலம் வருதல் | — விருப்பம் அளிக்கும் |
| மாலையில் வலம் வருதல் | — எல்லாப் பாவத்தையும் அகற்றும் |
| அர்த்த சாமத்தில் வலம் வருதல் | — மோட்ச சித்தியும் உண்டாகும் |

| | |
|---|---|
| விநாயகருக்கு | — ஒருமுறை வலம் வருதலும் |
| சூரியனுக்கு | — இரண்டுமுறை வலம் வருதலும். |
| சிவனுக்கு | — மூன்றுமுறை வலம் வருதலும். |
| அம்பாளுக்கு | — நான்குமுறை வலம் வருதலும். |

இன்றியமையாதவை என்று கூறுவாரும் உளர்.

பிரகாரத்தில் வலம் வரும்போது, பெண்கள், எண்ணெய்க் குடத்தை எடுத்துச் செல்வதுபோல் அடிமேல் அடிவைத்து, பிறருடன் பேசாமல் செல்லுதல் வேண்டும்.

திருக்கோயிலிலுள்ள விநாயகர், முருகன், அம்பாள் முதலிய திருச்சந்நிதிகளைத் தனியாக வலம்வருதல் கூடாது; சேர்த்தே பொதுவாக வலம்வருதல் வேண்டும் ஏனெனில், மூலமூர்த்தியின் சாநித்தியம் குறைவு படும்.

கொடிமரத்துக்கு வெளியிலுள்ள இடங்களுக்கு இந்த நியதி இல்லை.

1. அடி தண்ட வலம் வருதல் — ஓர் அடிக்கு ஒருமுறை வணக்கம் செய்தவாறு வலம் வருதல்.

2. அங்கம் வலம் வருதல் — உடல் முழுவதும் நிலத்திற் படும்படி படுத்துக் கொண்டே உருண்டு வலம் வருதல்.

சூரிய உதயம் தொடங்கி அர்த்தசாமம் வரையிலோ, அல்லது ஒருசாமம் வரையிலோ அங்கம் வலம்வருதல் செய்தவர் தீவினைகளெல்லாம் நீங்கப்பெற்று முத்தியடைவார் என்று அருணகிரி புராணம் கூறுகின்றது.

நாம் பிறப்பு, இறப்பு என்னும் மாயாசக்கரத்தில் சுழன்று வருகின்றோம். மாயாசக்கரமான பலிபீடத்துடன் மூன்றுமுறை வலம் செய்வது, 'தூல, சூட்சும, காரண உடல்களிலிருந்து என்னை விடுவி' என்று வேண்டுவதாகும் இவ்வாறு சிவபுராணம் கூறுகின்றது

காசி அன்னபூரணி கோயிலை ஒருபறவை தற்செயலாக வலம் வந்தால் இரண்டு கலப காலம் சுவர்க்க இன்பத்தை அனுபவித்து பூமியில் அரசனாகப் பிறந்ததாக வரலாறு உள்ளது வலம் வருதலில் சோமசூத்ர வலம்வருதல் என்று ஒரு முறை உண்டு இதை அன்றாடம் செய்யாவிட்டாலும் பிரதோஷ காலத்தில் செய்தல் மிகவும் விசேஷமானது. இவ்வலம் வரும் முறையாவது முதலில் நந்தியைத் தரிசித்து இடப்புறமாகவே சென்று சண்டிகேசரைத் தரிசித்து. அங்கிருந்து வந்த வழியாகவே திரும்பிவந்து நந்தியைத் தரிசிக்க வேண்டும். அங்கிருந்து வலமாகச்சென்று சோமசூத்ரம் அல்லது கோமுகி என்னும் சிவலிங்க அபிஷேகத் தீர்த்தம் விழும் இடத்தைத் தரிசித்து வந்தவழியாகவே திரும்பிவந்து நந்தியைத் தரிசிக்க வேண்டும். மீண்டும் இடப்பக்கமாகச் சென்று சண்டிகேசரைத் தரிசித்து அதேவழியாகத் திரும்பி வந்து வலப்புறமாகச் சென்று கோமுகியைத் தரிசித்து அதே வழியாகத் திரும்பிவந்து. மீண்டும் இடப்புறமாகச் சென்று சண்டிகேசரைத் தரிசித்து அதேவழியாகத் திரும்பிவந்து நந்தியைக் கையால் தொட்டு, இரு கொம்புகள் வழியாகச் சிவலிங்கத்தை 'அர அர' என்று தரிசனம் செய்து திரும்புதல் வேண்டும்.

1. இதனை ஒருமுறை செய்தவர் எல்லாப் பாவங்களையும் நீக்குவார்
2. இரண்டுமுறை செய்தவர் சுவர்க்கத்தை அடைவர்
3. மூன்றுமுறை செய்தவர் இந்திரனுடைய செல்வத்தை அடைவார்
4. நான்குமுறை செய்தவர் பிரமலோகத்தை அடைவார்
5. ஐந்துமுறை செய்தவர் எல்லா உலகுகளையும் அடைவார்
6. ஆறுமுறை செய்தவர் பெரிதான அட்ட ஐசுவரியங்களையும் அடைவார்
7. ஏழுமுறை செய்தவர் தமது கைங்கரியப் பேற்றினை உடையவராவார்
8. எட்டுமுறை செய்தவர் தமது சாலோக்கியத்தை அடைவார்
9. ஒன்பதுமுறை செய்தவர் இறைவன் சாமீப பாதத்தை அடைவார்

10. பத்துமுறை செய்தவர் சாரூபபதத்தை அடைவார்

11. பதினொருமுறை செய்தவர் இறைவனை அடைவார்

12. பன்னிரண்டுமுறை செய்தவர் இறைவனோடு இரண்டறக் கலப்பார்

# கருவறைத் தத்துவம்

மூலவர் என்பவர் கருவறையில் எழுந்தருளியுள்ள சிவலிங்க மூர்த்தியானவர் இவரைத் தரிசிக்குமுன், துவாரபாலகர்களின் முன்சென்று "அடியேன் உட்சென்று இறைவனை வணங்குவதற்கு அனுமதி செய்தருளும்" என்று வேண்டிக்கொண்டு கருவறையில் உள்ள மூலவரைத் தரிசிக்கச் செல்லுதல் வேண்டும். கருவறை முன்னுள்ள வாயிற்படி வரைதான் செல்லவேண்டும். கருவறையைக் 'கர்ப்பக்கிரகம்' என்றும் மூலத்தானம் என்றும் சொல்வார்கள். இது பிரதான மூர்த்தியை, மூலமூர்த்தியை வைத்து வணங்கும் இடம். இதன் உண்மை, எல்லா உலகங்களையும் படைத்ததற்குக் காரணமான மூலப்பிரகிருதியின் இடம் என்பது, கடவுள் உலகைப்படைக்க நினைத்த காலத்து, அவரது அருட்சக்தியை மாயையிடத்தே உண்டாக்கச் செய்கின்றார் என்பது கருத்து. இம்மூல மூர்த்தியை வணங்கிக்கொண்டு, உட்பிரகாரங்களில் உள்ள ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்குதல் வேண்டும்.

தத்துவான்ம நிலையில் அதிகார நந்தியை வணங்கி ஆன்மாவின் கடமையை உணர்ந்த மனிதன், நந்தியின் அருகில் நின்று மூலவரைக் கண்டு வணங்குகின்றான். கருவறையில் திருக்காட்சியருளும் மூர்த்தி அம்மனிதனுக்குச் சிவான்ம நிலையை உணர்த்தும் சின்னமாகத் திகழ்கின்றார்.

தத்துவான்மா நிலையிலுள்ள அவன், உலகியல் தத்துவ விசாரணைகளின் பலனாகவும், உலகத்துன்பத்தின் ஓயாத நலிவாலும், தியானம் முதலிய பயிற்சிகளாலும் நாளடைவில் "நான் இன்ப துன்பங்களின் இருப்பிடமான உடம்புமல்ல, இச்சையுமல்ல, மனமுமல்ல" என்ற எண்ணம் உள்ளூறப் பெற்று 'இத் தத்துவங்களை என்னால் அடக்கவும், ஆளவும் முடியும் எனவே நான் பிரம்மம்' என்னும் நினைவு தோன்றும்.

மூலவரை நோக்கி வழிபடுங்கால் உண்டாகும் இந்நிலைவின் நிலையே சிவான்ம நிலை. சிவான்ம நிலையை உணர்த்தும் மூர்த்தியாக மூலமூர்த்தி மூலவராக விளங்குகின்றார்.

# மகாமண்டபத் தத்துவம் (உண்மை)

அதிகார நந்தியின் அருகில் நின்று மூலவரைக் கண்டு வணங்கிய வன், அடுத்துள்ள மகாமண்டபத்திற்குச் செல்கின்றான். அம் மகா மண்டபத்திலிருந்து உள்ளே செல்லச் செல்ல இடம் குறுகலாகவே அமைந்துள்ளது. இந்த அமைப்பு உண்மை நிலையில் இவ்வாறு ஆன்ம நிலையில் வழிபடவருவோரின் எண்ணிக்கை குறைந்தளவு என்பதை உணர்த்துவதாகும்.

ஆசாரியர் என்றும் பட்டர் என்றும் குருக்கள் என்றும் கூறப்படு கின்ற ஆன்மலிங்கம் உள்ள இடம் மகாமண்டபம். ஆலயவழிபாடு புரியச்செல்வோர் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, கற்பூரம் ஆகியவற்றைக் கொண்டு போகவேண்டும் என்பது ஆகமவிதி எனவே வழிபடச் செல்வோர் இவற்றைக் கொண்டுசெல்வது வழக்கம். இவற் றைக் கொண்டுசென்று மகாமண்டபத்தில உள்ள ஆன்மலிங்கமாகிய குருக்களிடம் கொடுப்பர். குருக்கள் அவற்றைக் கொண்டு செய்யும் ஆராதனையும் ஒரு தத்துவத்தை உணர்த்துகின்றது.

தேங்காயானது வழிபடச் செல்லும் ஆன்மாவைக் குறிக்கும் தேங்காயின் மூன்று கண்களும் ஆன்மாவை மூடிநிற்கும் மும்மலங் களைக் குறிக்கும். மும்மலங்கள் ஆணவம், கன்மம், மாயை. மூன்று கண்களையுடைய தேங்காயின் ஒரு ஆன்மாவை பதிந்து நிற்கும் அந்த ஓட்டினுள் அமைந்த வெண்மையான தீஞ்சுவைப் பருப்பு ஆன் மாவைக் குறிக்கும.

தேங்காயின் ஒரு கருவியின் துணையின்றிக் கையால் உடைப் படுவதில்லை மிகவும் கடினம் உடையது. அது மனிதனை மூடிநிற்கும் பாசங்கள எளிதில் விலக்க முடியாத தன்மையைக் குறிக்கும். அத் தேங்காயை உடைப்பதற்குத் தேவையான கருவி ஆன்ம விடுதலைக் குத் தேவையான இறைவனது திருவருளைக் குறிக்கும். கருவிகொண்டு தேங்காயை உடைக்கும் குருக்கள் அருட்குரவராகிய இறைவன் கருணை தேவை என்பதைக் குறிக்கும்.

நறுஞ்சுவையுடைய பழங்கள் அடியாரின் நல்வினைப் பலன்களைக் குறிக்கும். வெற்றிலை, பாக்கு அவருடைய முக்குணங்களைக் குறிக் கும் தூயவெண் கற்பூரம் இறைவனோடு இரண்டறக் கலக்கும் பக் குவம் வாய்ந்த ஆன்ம நிலையை உணர்த்தும். குருக்கள் தேங்காயை உடைத்துவைத்துக் கற்பூர ஆராதனை செய்யுங்கால் அஃது ஆகாயத் தோடு இரண்டறக் கலந்து விடுவதால் இந்த உண்மை விளங்கும்.

தேங்காய் பழம் முதலியவற்றோடு வழிபடச் செல்லும் அடியார் தம்மையும், தம் வினைப் பயன்களையும் இறைவனுக்கு அற்பணிக்கச் சென்று மகாமண்டபத்தை அடைந்தவுடன் ஆசாரியர் வந்து அவற்றை ஏற்றுத் தேங்காயை உடைத்து, அனைத்தையும் சுத்திசெய்து, அதாவது மலங்களை நீக்கி இறைவனுக்கு அற்பணித்து, கற்பூரத்தை ஏற்றி மூர்த்தியின் தரிசனத்தையும் அருளையும் இந்த அடியார்க்கு வழங்குவார். மும்மலங்களால் பந்தப்பட்டு முக்குணவயப்பட்டவராக நிற்கும் ஆன்மா உலகைச் சார்ந்து நிற்பதால் உண்டாகும் துன்பங்களையும் இறைவனைச் சார்ந்து நிற்கும்போது உடைபட்ட தேங்காயின் உள்ளிருக்கும் தூய இனிய வெண்பருப்புப் போன்று மல நீக்கம் பெற்றுப் பேரின்பம் துய்த்தலையும் அந்த ஆசாரியார் உணர்த்துவார் மந்திர உபாசனையும் அவருக்கி உபதேசிப்பார். இந்நிலையே மந்திரான்ம நிலையாகும் மந்திரான்ம நிலையை உணர்த்துபவர் ஆசாரியார் ஆகிய ஆன்மலிங்கம்.

## பரமான்ம நிலை

ஆன்மா ''தான்'' என்ற முனைப்புக் கொண்டுள்ள நிலையைப் பலிநிலை ஆன்மநிலை என்று சொல்லப்படும். ''நான் உடம்புமன்று, இச்சையுமல்ல, மனமும் அன்று, தத்துவங்களும் அல்ல இத் தோற்றப் பொருட்கட்கு அப்பாற்பட்ட நான் பிரம்மனே'' என்ற எண்ணம் உள்ள நிலையை ''ஆன்ம'' ஞானம் என்று கூறுவர். தனக்கென்று தனித் தன்மையின்றிச் சார்ந்ததன் வண்ணமாக நிற்பதே ஆன்மாவின் இயல்பு.

தேங்காய், பழம் முதலியவற்றைக் கொண்டு செல்லாதவரை ஆசாரியார் கவனிப்பதில்லை. அவரை நோக்கி ஆசாரியார் வருவதுமில்லை அதுபோன்றே ஆன்மபலன், அனுட்டான பலன், காமபலன் அனைத்தையும் இறைவனுக்கு அற்பணிக்கத் தயாராகாத போது. அருட்குரவராகிய இறைவன் அவரைக் கவனிப்பதோ, அவர்முன் அருவுருவாய் எழுந்தருளுவதோ இல்லை

மும்மலப் பரிகாலமோதி, தன்னுடைய உடல், ஆவி உடமை அனைத்தையும் பலன்விரும்பாது இறைவனுக்கு அற்பணிக்கும்போதே இறை அருளுருவாய்த் தோன்றி ஞானத்தீயின ல் அவரது மலங்களைச் சுட்டெரித்து அவருக்கு பேரின்ப நிலையை அருளுவார். அந்த அடியார் 'தான்' என்ற முனைப்பு அறவே நீங்கி இறைவனது அருள் குறியாகவே நிற்பர். அருள்நிலை எய்தியவர் பரஞானம் அடைவதற்குரிய சிவலோக பாவனையும் மந்திர உபாசனையும் மேற்கொண்டு அவற்றில முதிர்ச்சி உற்றபொழுது தக்க தருணத்தில் அவன்முன் இறைவனே திருவுருக்கொண்டு எழுந்தருளி அவரைத் தமது திருவடி சேர்ப்பார்.

இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்து குணங்குறி அற்ற நிலையே பரமான்மநிலை - பரவொளிநிலை - அகண்டலிங்கநிலை என்பர்.

## யந்திரத் தத்துவம் (உண்மை)

திருக்கோயிலின் உயிர்நிலையாக உள்ளது, கருவறையில் மூலவரின் கீழே தாபனம் செய்யப்பட்டுள்ள யந்திரம் என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. யந்திரம் என்பது இறைவனின் அருட்கருவியாகும் யந்திரம் இல்லாத மூலமூர்த்தி அருளில்லாத வெறுஞ்சிலையாகும்.

இறைவனது பூசைக்கு இன்றியமையாதது யந்திரமே யந்திரத்தின் மேல் உள்ள திருவுருவம் மூலமூர்த்தி அருவப் பொருட்களை அறிய மாட்டாத மனத்தின் கவர்ச்சிக்காகவும், மனத்தை ஒருமுகப் படுத்துவதற்கு வாய்ப்பாகவும், இறைவன் பற்றிய சில குறியீடுகளைக் காட்டுவதற்காகவும் துணை செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆன்மார்த்த வழிபாடு செய்வோர் உருவமின்றி யந்திரத்தை மட்டுமே வைத்துப் பூசை செய்துவரும் வழக்கமும் உண்டு.

யந்திரம் முதலில் வரையப்படும் போது ஓர் உலோகத் தகடாக வெறுஞ்சடப் பொருளாக இருக்கும், பின்னர் மந்திரம், முத்திரை, பாவனை, கிரியை ஆகியவற்றால் அது பாடம் பண்ணப்படும்போது சடப்பொருள் நிலையிலிருந்து சிறிது சிறிதாக நீங்கி அருட்கவிக்குரிய பக்குவத்தை எய்திவரும். முடிவில் அது பூரண அருட்கவியாக மாறி யந்திரம் என்னும் பெயர் பூண்டு தாபனமும் பிரதிட்டையும் செய்யப்படும். அப்போது அது முற்றிலும் இறைவனுடைய அருட்கவியாக நின்று திருவருட் சக்தியை இரவும் பகலுமாக இடைவிடாது நாற்புறமும் பரப்பிக் கொண்டிருக்கும் என்று நெற்றிக்கண் உடைய யோகியர் கூறுவர்:

திருக்கோயிலில் அன்றாடம் நடைபெறும் ஆராதனை புரியும் செயல்களில் ஒன்று, அன்றாடம் வெளிப்பட்டுச் செல்லும் திருவருட் சக்திக்கு ஈடு கொடுப்பதாகும். ஆராதனை சரியான முறையில் நிகழாத யந்திரம் நாளடைவில் திருவருட் சக்தியை இழந்து விடும். இன்று பல திருக்கோயில்களில் திருவருட்சக்தி குன்றி. பொலிவுற்று இருப்பதற்குக் காரணம் இதுவே ஆகும்.

## புனிதமர தத்துவ (உண்மை)

இயற்கை வழிபாட்டில் தமிழ் மக்களிடையே சிறப்பாக அமைந்தவை மரங்கள். யாவருனும் பெரியோனாகிய சிவபெருமானை எல்லாவற்றிலும் பெரிய ஆலமர நிழலில் இருப்பவராக மக்கள் கருதினர். முருகனைக் கடம்ப மர நிழலிலும், சக்தியை வேம்பிலும் கண்டனர். மற்றும் அரசு, வன்னி, வில்வம் முதலிய மரங்களிலும் மர நிழல்களிலும் மக்கள் தெய்வங்களை வழிபட்டனர்

'' அழல்புரை குழைகொழ நிழல்தரும் பலசினை
ஆலமுங் கடம்பும் நல்யாற்று நடுவும் '' — பரிபாடல் •

'' ஆலமும் தொல்வலி மரமும்
முறையுளி பராய் '' — கலித்தொகை

இவை போன்ற இலக்கியப் பகுதிகள் பண்டைத்தமிழ் மக்கள் மரங்களில் கடவுளைக் கண்டு வணங்கியமையை இனிது விளக்குகின்றன போர் மறவர் உண்ண மரத்தில் குறிபார்க்கும் உன்னதநிலை என்னும் துறையைத் தொல்காப்பியம் உணர்த்துகின்றது.

கடவுளுக்கு உருவங்கண்டு வழிபடத் தொடங்கிய காலத்திலும் மக்கள் அவ்வுருவங்களை, இயற்கையின் அழகையும் நிலையும் தருவன ஆகிய அம் மரங்களின் அடியில் கடவுள் உருவை வைத்து வணங்கினார்கள், இயற்கை வழிபாட்டின் அடிப்படையில் தோன்றிய பழக்கம் இது.

இதன் அடையாளமாகவே இப்பொழுதும் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு திருக்கோயிலிலும் புனிதமரம் காணப்படுகின்றது. இதனை வடமொழியில் 'ஸ்தல விருட்சம்' என்று கூறுவார்கள். இப் புனித மரங்களின் பெயரிலேயே சில தலங்களின் பெயர்களும் அமைந்து காணப்படுகின்றன. பானையூர், பனந்தாள், எருக்கத்தம், புலங்குடி, ஆலம்பொழில், ஆலந்துறை, ஆலங்காடு, மாந்துறை, நெல்லிக்கா, தில்லைவனம், கடம்பவனம், பாதிரிப்புளியூர் போன்ற தலப்பெயர்கள் புனித மரங்களால் அமைந்தவையாகும்.

இந்து ஆலயங்களில் உள்ள விக்கிரகங்களை வழிபடும் முறைகளைத் தொகுத்தோம் மேலும் திருக்கோவிற் பூசை முறைத் தத்துவங்களும், கிரியா அனுட்டானத் தத்துவங்களும் பின்னர் விரிவாகக் காணுவோம். இறைவன் திருவருள் சூழ்ந்து இன்பம் பெருகிட ஆலயங்களை நாடி, நலமான வழிபாடுகளைச் செய்து உய்வடைவோம்.

வேதங்கள்பற்றி ஆ[illegible]ச்சி செய்து வேதங்கள் பற்றிய தெளிவான அறிவை இளம் த[illegible]றையினரிடையே இலகுவாகப் புகுத்தியவராகிய இவ் ஆசிரியர் வேதங்களைப் பயன்படுத்தும் இடமாகிய ஆலயம் பற்றிய ஆய்வு செய்து அதை நூல் வடிவம் ஆக்கியமை மிகச் சிறந்ததோர் முயற்சியாகும்.

சமஸ்கிருத பண்டிதர்
**பிரம்மஸ்ரீ. கி சதாசிவசர்மா**

இவர் சிறந்த சோதிடர், இக்கலையையும் அழகான முறையில் பயின்று, அதன்மூலமும் மக்களுக்குச் சேவை ஆற்றிவருகின்றார். தந்தையார் மரபுமுறை வைத்தியம் போன்றவற்றையும், மக்கள் துன்பம் [illegible]க்[illegible] போற்றி வருகின்றார்.

**சிவஸ்ரீ. சோ தண்டபாணிகதேசிகர் J. P**
வல்வை முத்துமாரி அம்மன் பிரதமகுரு

இவ்வுலக வாழ்க்கையில பிறிதொன்றினையும், நாடாது இறை [illegible]ண்டினையே இலட்சியமாகத் கொண்டு வாழப் பழகிக் கொண்ட என் ஆயிரக் கணக்கான மாணவச் செல்வங்களுள் குறிப்பிடத்தக்க சிறந்த ஓர் மாணவனாக என்னிடம் படித்த காலத்திலும் பட்டதாரியாகி என்னுடன் படிப்பித்த காலத்திலும் சிறந்து விளங்கியவர் சிவஸ்ரீ. தி. சோமாஸ்கந்தரஜக் குருக்கள் B. A. (இலங்கை) அவர்கள்.

**நா. குழந்தைவேலு B. A. ( Hons )**
புதிய உயர் கல்லூரி தமிழ்த்துறை விரிவுரையாளர்

'' ஆலய வழிபாடும் தத்துவமும் '' என்ற நூலைப் பார்வையிட்டேன. கோயிற் பண்பாடே, மக்கள் வாழ்க்கைத் தத்துவமாக விளக்கியுள்ளார். அன்பும், பணிவும் மிக்கவர் இந்நூல் ஆசிரியர்.

**திருமதி. S. அருள்நங்கை**
புதிய உயர்கலைக் கல்லூரி - அதிபர்

**இவ்வாசிரியரின் பிற நூல்கள்**

1. அறுவகைச் சமயநெறி 1985
2. அறநெறி 1986
3. நல்லறம் 1988
4. கிரியைகள் 1989
5. வேதங்கள் 19[illegible]

# இந்நூல் ஆசிரியர் பற்றி ..........



நெல்ல... டப் பத்திரகாளி அம்மனின் திருமேனி தீண்டும் பாக்கியம் பெற்றவர். அப் பகுதியில் உள்ளோரால் நன்கு மதிக்கப்படுவர். அனுபவ அறிவும் கல்வி அறிவும் நன்கு வாய்க்கப்பெற்றவர். நல்லாசிரியர்களைத் தமது குருவாகப் பெறும் பாக்கியம் பெற்றவர்.

விரிவான முறையில் ஆலய வழிபாடு பற்றிய நூல் ஒன்றை ஆசிரியரிடமிருந்து சைவ உலகம் எதிர்பார்க்கின்ற...

**எஸ். சிவலிங்கராசா** M. A.
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை யாழ். பல்கலைக் கழக...

**சிவஸ்ரீ. சோமாஸ்கந்தராஜாக்** குருக்கள் B. A. அவர்கள் "ஆலய வழிபாடும் தத்துவமும்" என்னும் இந்நூல் அளவிலே சிறியதாயினும் நல்ல பொருளை எடுத்துக் கூறுகின்றது.

சிறிய வாக்கியங்களாக, தர்க்கநடையிலே அவை அமைகின்றன. வழிபாட்டினுடைய தேவை என்ன என்பதை விளக்கும் முதலாவது பகுதி நல்ல தொடக்கத் தொடர்களாக அமைகின்றது.

பேராசிரியர் கலாநிதி **அ. சண்முகதாஸ்**
தமிழ்த்துறைத் தலைவர் யாழ். பல்கலைக் கழகம்

எல்லோருக்கும், நல்லவராகவும், இனியவராகவும் ஒருவர் இருக்க முடியுமெனில் அவர் சிவஸ்ரீ சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் என்பது என் முடிவு புகழ்வதற்காகக் கூறும் வார்த்தைகள் அல்ல. புரிந்ததினால் கூறும் வார்த்தைகள்.

**செங்கை ஆழியான்**

இவர் எனது மதிப்பிற்கும், அன்பிற்கும் பாத்திரமாகிய சிஷ்யனாவர். இவரின் அறிவும், ஆற்றலும் போற்றத்தக்கது. இக்கால மக்கள் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்களடங்கிய இந்தநூலை ஆக்கி, வெளியிடுவதையிட்டு மிகவும் சந்தோஷம் அடைகின்றேன்.

கிரியா வித்தகர் **சிவபாதசுந்தரக் குருக்கள்**
மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை.